முடிசூட்டும் கர்த்தர்

J.சாம் ஜெபத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

முடி சூட்டும் கர்த்தர்!

(THE LORD WHO CROWNETH THEE)

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்:
J. சாம் ஜெபத்துரை
51, [illegible] ரோடு,
கோடம்பாக்கம், சென்னை — 600024.

[illegible] '88

[illegible] ரூ. 8 [illegible]

[illegible]

[illegible]
53 A. [illegible]
[illegible] - 600 024.

அர்ப்பணம்

என்னை கிருபையினாலும்
இரக்கங்களினாலும் முடிசூட்டும்படி,
முள்முடி சூடிய என் அருமை
இரட்சகராம் **இயேசு கிறிஸ்துவுக்கே!**

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	முடி சூட்டும் கர்த்தர்!	5
2.	சாபத்தின் கிரீடமும், ஆசீர்வாதத்தின் கிரீடமும்!	14
3.	நீதியின் கிரீடம்!	28
4.	ஜீவ கிரீடம்!	34
5.	மகிமையுள்ள வாடாத கிரீடம்!	42
6.	அழிவில்லாத கிரீடம்!	49
7.	கிரீடங்களோடு கூட ...!	54

முடி சூட்டும் கர்த்தர்!

"உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடி சூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்" (சங் 103:4).

ஒரு பெரிய சுவிசேஷக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. பிரசங்கத்திற்கு முன்னால் செய்தி கொடுக்கப் போகும் ஊழியர் மிக உருக்கமாய், "ஆண்டவரே இன்றைய கூட்டத்தை ஆசீர்வதியும்" என்று ஜெபித்துக் கொண்டிருந்தார்.

திடீரென்று அந்த ஊழியரின் மனக்கண்கள் திறக்கப்பட்டது. கிறிஸ்து மகிமையின் தேவனாய் அந்தமைதானத்தை நோக்கி நடந்து வருவதைக்கண்டார், "நான் என் ஜனத்தை ஆசீர்வதிக்க விரும்புகிறேன், அதற்காகவே வந்திருக்கிறேன்" என்றார்.

ஊழியருக்கு ஒரு தடுமாற்றம். அவர் எண்ணினார், "இவ்வளவு திரளான ஜனங்கள் இருக்கிறார்களே, ஒவ்வொருவர் மேலும் தன் கைகளை வைத்து இயேசுக்கிறிஸ்து ஆசீர்வதிக்க வேண்டுமானால் அதிக நேரம் பிடிக்குமே......" அந்த நேரம் ஓர் அற்புதம் நடந்தது!

முகம் பார்க்கிற பெரிய கண்ணாடியில் உங்கள் முகம் பெரிதாய் தெரியும். ஆனால் அது திடீரென்று உடைந்து ஆயிரம் துண்டுகளாக சிதறும் என்றால், அந்த ஆயிரம துண்டுகளிலும் உங்கள் முகம் தோன்றுமல்லவா? அதுபோலவே, அந்த ஊழியர் எண்ணிக் கொண்டிருக்கும்போதே இயேசுக்கிறிஸ்து ஆயிரக்கணக்கான இயேசுவாய் மாறி, கூட்டத்திற்கு வந்திருந்த ஒவ்வொருவரின் அருகிலும் கடந்து வந்து ஆசீர்வதிக்கிறதைக் கண்டார். ஊழியரின் உள்ளம் ஆனந்த பரவசமடையவே மகிழ்ச்சியின் கண்ணீரோடு கர்த்தரை துதித்தார்!

ஆம், இஸ்ரவேலை (தேவ ஜனங்களை) ஆசிர்வதிப்பதே அவரது சித்தமும், பிரியமுமாய் இருக்கிறது. நாம் ஜெபத்தோடு கர்த்தரின் சமுகத்திற்கு வரும்போதெல்லாம் அவர் நம்மேல் உள்ள பாசத்தோடு அங்கு கடந்து வந்து நம்மை ஆசிர்வதிக்கிறார்.

இந்த புத்தகத்தை நீங்கள் வாசிக்கும்போதே, நீங்கள் எங்கிருந்தாலும், எந்த சூழ்நிலையிலிருந்தாலும், கிறிஸ்துவின் பிரசன்னத்தை ஏங்கி எதிர்பார்த்து வாசிப்பீர்களானால், நிச்சயமாகவே கிறிஸ்து உங்கள் அருகில் கடந்து வந்து உங்களை ஆசீர்வதிப்பார்.

கர்த்தர் திட்டமாய்ச் சொன்னார், ''நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்" (யாத். 20:24).

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை ஆசிர்வதிக்கும்படி, வைராக்கியம் கொண்டிருக்கிறார். உனக்காக ஜீவனைக் கொடுத்தவர் உன்னை ஆசிர்வதிக்காமல் இருப்பாரோ? அவர் உன்னை ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதங்களை யாராலும் தடுக்க முடியாது. அவரது ஆசீர்வாதங்களே உனக்கு கிரீடமாய் விளங்கட்டும்!

1. கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டுகிறார்:-

உன்மீது மனதுருகுகிற கர்த்தர் அன்போடு உன் அருகில் வந்து, ''உன்னைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டுவேன் என்கிறார்'' (சங் 103:4).

நீ முடிசூட்டப்பட்டவனாய், ராஜாதி ராஜாவின் குமாரனாய் இருக்க வேண்டும் என்பதே அவரது பிரியமாய் இருக்கிறது. மனமகிழ்ச்சியின் பாத்திரமாய் உன்னை மாற்றி உனக்கு இரக்கம் செய்ய அவர் சித்தங்கொண்டார்!

உனது துயரத்தின் நாட்கள் முடிந்து போகிறது! உனது கண்ணீரின் காலங்கள் நீங்கிப் போகிறது! நீ பாடுகளை அனுபவித்த நாட்களுக்கும், வேதனையைச் சகித்த வருஷங்

களுக்கும் தக்கதாக, உனக்கு கிருபையின் நாட்களையும் இரக்கத்தின் வருஷங்களையும், இரட்டிப்பான ஆசீர்வாதங்களையும் அருளுவதற்குக் கர்த்தர் சித்தம் கொண்டார்!

''கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி...'' எத்தனை அருமையான வார்த்தைகள் இவை!

தகுதியில்லாதவர்கள் மேல் பாராட்டப்படும் தேவனுடைய தயவுதான் கிருபை! நியாயத்தின்படி வரவேண்டிய நியாயத்தீர்ப்பை கொடுக்காதபடி மன்னித்து மனமிரங்குவது தான் இரக்கம்!

''நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்'' (லூக் 1:30).

''நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்''
(ஏசா 54:8).

''மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும்...'' (ஏசா 54:10).

தேவனது கிருபை எத்தனை அருமையானது! பொன்னினாலும், வைரத்தாலும் செய்த கிரீடங்களைப் பார்க்கிலும், உன்னத கிருபையினால் செய்த ஆவிக்குரிய கிரீடம் எத்தனை மகிமையானது!

கிறிஸ்து உன் அருகில் வருகிறார், ''மகனே மகளே, நான் உன்னை கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டட்டும். பரிசுத்தத்தால் உன்னை அலங்கரிக்கட்டும்'' என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

2. கனத்தினாலும், மகிமையினாலும் முடிசூட்டுகிறார்:-

''இயேசு நம்மைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் மட்டுமல்ல, நம்மை மகிமையினாலும், கனத்தினாலும்கூட முடிசூட்டுகிறார்'' (எபி 2:9). அல்லேலூயா!

அவருடைய மகிமையை நமக்குத்தருகிறார், அவருடைய மகிமைக்கு ஒப்பான ஒரு மகிமையிலே நம்மை மறுரூபமாக்கவே அவர் நம்மை அழைத்திருக்கிறார். ஆ! நம் அருமை கர்த்தர் நம்மேல் வைத்த அன்பு எவ்வளவு பெரியது!

ஒருமுறை இயேசு பிதாவை நோக்கி ஜெபிக்கும்போது: "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் என்றார்" (யோ 17:22). இயேசு தம்முடைய மகிமையினாலே நம்மை முடிசூட்டுகிறார்.

தேவபிள்ளையே, உன் தலையில் கிறிஸ்து மகிமையின் கிரீடத்தைச் சூடுவதைச் சற்று சிந்தித்துப்பார்; அது எத்தனை விசேஷமான ஒரு கிரீடம்; பரவசமடைந்து ஆண்டவரைத் துதிப்பாயா? கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை எப்போதும் மகிமையாய் உயர்த்தவே விரும்புகிறார். மகிமையான காரியங்களை உனது வாழ்க்கையில் செய்கிறார். அவர் மகிமையின் ராஜா அல்லவா? தம்முடைய பிள்ளைகளை மகிமையினால் முடிசூட்டுவதே அவருடைய பிரியம்!

சாத்தான் எப்போதும் ஒரு மனுஷனுடைய மகிமையையும், மேன்மையையும் குலைத்துப்போடவே விரும்புகிறான். தேவ சாயலிலும், தேவ ரூபத்திலும், தேவ மகிமையிலும் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனுடைய இருதயத்தில் கீழ்ப்படியாமையையும், பொறாமையையும் கொண்டு வந்து விழும்படி செய்கிறான். தேவன் கொடுத்த மகிமையை மனுஷனைவிட்டு நீக்கிப்போட முழு பெலத்தோடு முயற்சிக்கிறான். ஆனால் இயேசுவோ நமக்கு மகிமையின் கிரீடத்தைச் சூட்டும்படிக்கு பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார். நமக்காக மரணத்தை வென்றதினிமித்தம், நம்மை அவர் மகிமையினால் முடிசூட்டுகிறவராய் இருக்கிறார்.

மட்டுமல்ல, நம்மை கனத்தினாலும் முடிசூட்டுகிறார். "என்னை கனம்பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்" என்பது அவரது வாக்குத்தம். "ஒருவன் எனக்கு ஊழியம் செய்வானானால் அவனை என் பிதா கனம் பண்ணுவார்" என்றார். கிறிஸ்துவை நேசிக்கிற ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையையும், அவர் கனத்தினாலும், மகிமையினாலும் முடிசூட்டுகிறார். உன் தலையை உயர்த்தி, எண்ணெயால் அபிஷேகம் பண்ணி சகல ஜாதிகளுக்கு முன்பாகவும், ஜனங்களுக்கு முன்பாகவும் உன்னைக் கனப்படுத்துகிறார்.

ஒருவேளை நீ கிறிஸ்துவை அறிவதற்கு முன்பாக மனம் போன போக்கில் ஜீவித்து பாவ வழிகளிலே சென்று உன்னுடைய பெயரையும், உன் மேன்மையையும் கெடுத்துப் போட்டிருக்கலாம். ஊரார் மத்தியிலும், உலகத்தார் மத்தியிலும் மதிப்பை இழந்து குறைவாக எண்ணப்பட்டிருக்கலாம். ஆனால் நீ கிறிஸ்துவண்டை வரும்போது அவர் தம்முடைய இரத்தத்தினால் உன்னைக் கழுவி உன்னை மேன்மையாய் உயர்த்துகிறார். நீ தேவனுடைய பிள்ளை என்று மற்றவர்கள் அறிந்துகொள்ளும்படிக்கு உனக்கு வரங்களையும், வல்லமையையும் தந்தருளுகிறார். யார் யாருக்கு முன்பாக நீ தலைகுனிந்து நடந்தாயோ அவர்களின் முன்பு நீ தலை நிமிர்ந்து, உற்சாகமாய் நடக்கும்படிக்கு நம்மைக் கனப்படுத்தி மகிமைப்படுத்துகிறார்! அல்லேலூயா!

நீ ஜெப வீரனாகவும், கர்த்தரை நேசிக்கிறவனாகவும் மாறும்போது உனக்கு முன்பாக பிசாசுகள் நடுங்கி ஓடுகிறது. வியாதிகள் சுகமாகிறது. நீ ஜெபிக்கிற ஒவ்வொரு ஜெபங்களுக்கும் பதில் கிடைக்கிறது. மற்றவர்கள் உன்னைப் பார்க்கும்போது கர்த்தர் உன்னை கனம் பண்ணியிருக்கிறார் என்று அறிந்துகொள்ளுகிறார்கள். கர்த்தர் சொல்லுகிறார்: "ராஜாக்கள் உன்னை வளர்க்கும் தந்தைகளும், அவர்களுடைய நாயகிகள் உன் கைத்தாய்களுமாயிருப்பார்கள்; தரையிலே முகங்குப்புற விழுந்து உன்னைப் பணிந்து, உன் கால்களின் தூளை நக்குவார்கள்; நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய்"' (ஏசா 49:23) என்கிறார்.

கர்த்தர் எவ்வளவாய் தம்முடைய பிள்ளைகளைக் கனம் பண்ணுகிறார் என்பதை யோசித்துப் பாருங்கள்! ஆம், நீ கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளவனாய் இருக்கும்போது பெரிய, பெரிய ராஜாக்கள் உன் கால்களின் கீழே வந்து விழுவார்கள். காரணம்; கர்த்தர் அவர்களுக்கு மேலாய் உன்னை கனத்தினாலும், மகிமையினாலும் முடிசூட்டுகிறவராய் இருக்கிறார்.

3. ராஜாவாக, ஆசாரியராக முடிசூட்டுகிறார்:-

"நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மை கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக" (வெளி 1:6),

இயேசு நம்மைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டுகிறார்; கனத்தினாலும் மகிமையினாலும் முடிசூட்டுகிறார்; மட்டுமல்ல; அவர் நம்மை ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும்கூட முடிசூட்டுகிறார். தம்முடைய பரலோகத்தின் அபிஷேகத் தைலமாகிய பரிசுத்த ஆவியை நம்மேல் ஊற்றி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்குகிறார்.

அல்லேலூயா!

பரலோகத்தில் தொனிக்கும் உற்சாகமான பாடலின் துதி என்ன தெரியுமா? "தேவரீர் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு; எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்" (வெளி 5:9,10).

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள், கிறிஸ்துவினுடைய பிள்ளைகளாக இருக்கிறோம்; அவரை ஏற்றுக்கொண்டவர்கள் அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கும்படி தேவன் அதிகாரம் கொடுத்திருக்கிறார். ஆம், நாம் ராஜாதி ராஜாவினுடைய பிள்ளைகள்; பரலோகத்திலும், பூமியிலும் சகல அதிகாரமுடைய சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பிள்ளைகள். நமக்கு இது எத்தனை பெரிய மகிழ்ச்சி! எத்தனை உற்சாகம்!

அந்த ராஜாதி ராஜாவே நம்முடைய அருகிலே வந்து நம்மைத் அவருடைய பிள்ளைகளாக கனப்படுத்தி, மகிமை

யால் முடிசூட்டுகிறார். ஒரு பேரரசன் தன்னுடைய குமாரனாகிய இளவரசனை முடிசூட்டுவதைப்போலவே கர்த்தர் நம்மை முடிசூட்டுகிறவராய் இருக்கிறார்.

ராஜாவினுடைய பிள்ளை அவனுடைய அரண்மனையெல்லாம் சுதந்திரமாகச் சுற்றித் திரியும்; ஆனால் ஒரு அந்நியனோ அந்த அரண்மனை அருகிலே வரவும் முடியாது, பிரவேசிக்கவும் முடியாது. காவலாளிகள் உடனே தடுத்து நிறுத்துவார்கள்.

கிறிஸ்து நம்மேல் பாராட்டின அன்பை நினைத்துப்பாருங்கள்; அவர் நம்மைப் பரலோக ராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவர்களாய் மாற்றினார். பரலோக ராஜ்யத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியோடு முடிசூட்டப்பட்டவர்களாய் நாம் கடந்து செல்லுவோம். அவர் நமக்காக அங்கே வைத்திருக்கிற மேன்மைகளை வார்த்தைகளினால் வருணிக்கவே முடியாது.

மட்டுமல்ல, அவர் நம்மை ஆசாரியர்களாகவும் முடிசூட்டியிருக்கிறார். நாம் ஆசாரியர்களாக நின்று கர்த்தருடைய ஜனத்தை ஆசீர்வதிக்கிறோம். ஆசாரியர்களாய் நின்று தேவனுக்கும், மனுஷருக்குமிடையே மத்தியஸ்தம் செய்கிறோம். ஆசாரியர்களாக நின்று தேவனுடைய ஆசீர்வாதங்களை வாங்கி கொடுக்கிறோம். பழைய ஏற்பாட்டில் மூன்று விதமான அபிஷேகங்கள் இருந்தது.

1. ராஜாவாக அபிஷேகம்
2. ஆசாரியனாக அபிஷேகம்
3. தீர்க்கதரிசியாக அபிஷேகம்

கர்த்தர் நம்மைத் தமக்கென்று வேறுபிரித்து இவ்விதமாய் முடிசூட்டுகிறார். அபிஷேகத் தைலமாகிய பரிசுத்த ஆவியானவர் நம்மில் ஊற்றப்படும்போது அது நமக்கு கிரீடமாய் மாறுகிறது. தேவபிள்ளையே, தேவன் உனக்கு அருளிச் செய்த பாக்கியத்திற்காக தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிப்பாயா?

4. அலங்காரமான கிரீடம்:- "அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும்; அது மகிமையான கிரீடத்தை உனக்குச் சூட்டும்" (நீதி. 4:9).

ஞானத்தைக் குறித்து சாலொமோன்ராஜா பேசும்போது, உனக்குக் கர்த்தர் ஞானத்தைக் கொடுப்பாரென்றால் அது உனக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும் என்றும், மகிமையான கிரீடத்தை அது சூட்டும் என்றும் உறுதியாய் கூறுகிறார்.

தேவபிள்ளையே, ஞானத்தைச் சம்பாதி; புத்தியையும் சம்பாதி; அது உனக்கு கிரீடமாய் இருக்கும். உண்மையான ஞானம் என்ன தெரியுமா? வேதம் சொல்லுகிறது: "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதி. 1:7). நீ கர்த்தருக்குப் பயந்து அவருடைய வழிகளிலே உண்மையும், உத்தமுமாய் நடக்கும்போது கர்த்தர் தம்முடையபரலோகத்தின் ஞானத்தினால் உன்னை நிரப்புவார். ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாய் இருந்தால் எல்லாருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிற தேவனிடத்தில் கேட்கக்கடவன். அவரே நமக்கு ஞானமானவர்: அவரே பரலோகத்தின் ஆலோசனைகளை நமக்குத் தந்தருளுகிறவர்; அவரே நம்மேல் தம்முடைய கண்களை வைத்து ஆலோசனை சொல்லுகிறவர். அவருடைய கிரீடம் அலங்காரமான கிரீடம்; அது நமக்கு ஞானமாய் இருக்கிறது!

உலகப்பிரகாரமான ஞானத்தை நான் சொல்லவில்லை. உலகத்தில் இப்பிரபஞ்சத்துக்குரிய ஞானிகள் ஏராளம் பேர்கள் இருக்கிறார்கள். கல்வி அறிவினால் ஞானத்தைச் சம்பாதிக்கலாம் என்று எண்ணுகிறார்கள். தத்துவ ஞானங்களைப் பேசக்கூடிய மூளை அறிவு நிறைந்தவர்கள் ஏராளம் பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் உலக ஞானம் கர்த்தருக்கு முன்பாக பைத்தியமானது; அதினால் பிரயோஜனமும் இல்லை.

சாக்ரட்டீஸ் என்ற கிரேக்க ஞானியைக் குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். எவ்வளவு ஞானம் அவருக்கு இருந்

தது! ஞானிகளை உருவாக்குகிற சர்வ கலாசாலையாகவே அவர் விளங்கினார். இன்றைக்கும் அவருடைய ஞானம் போற்றிப் பாராட்டப்படுகிறது. எவ்வளவோ ஞானமுடைய அவர் தன்னுடைய வாழ்க்கையிலே விஷம் குடித்து மரிக்க வேண்டியதாயிற்று. அவருடைய மனைவி கதறி அழுதாள். சாக்ரட்டீஸின் விலையேறப்பெற்ற ஞானம் கொஞ்சநேரத்தில் மண்ணுக்குத் திரும்பினது. அந்த மூளையைப் புழுக்கள் தின்றன.

தேவபிள்ளையே, மனித ஞானத்தை அல்ல, பரலோக ஞானத்தையே தேவன் உனக்கு தருகிறார். நீ தேவ ஞானத்தால் முடிசூட்டப்படுவாய் என்றால் அது உனக்கு அலங்கார மான கிரீடமாய் அமையும். நீ பரலோக பாக்கியத்திற்கு பங்குள்ளவனாவாய்.

வேதம் முழுவதும் பரலோக ஞானத்தால் நிரம்பியிருக்கிறது. இந்த வேதம் "பேதைகளை ஞானிகளாக்கும்;" பேதமையானவர்களுக்கு ஆலோசனை தந்து வழிநடத்தும்".

அலங்காரமான முடியினால், கிரீடத்தால் உன்னை முடிசூட்டும் கிறிஸ்துவுக்கு முன்பாக உன்னைத் தாழ்த்தி அவருடைய ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுவாயா? பரலோக ஞானததால் நிரப்படுவாயா? அந்த ஞானத்தின் மூலமாக திரளான ஆத்துமாக்களை கர்த்தரண்டை வழிநடத்துவாயா.

கர்த்தர் உன்னை கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டுகிறார். கனத்தினாலும், மகிமையினாலும் முடிசூட்டுகிறார். ராஜாவாகவும், ஆசாரியனாகவும் முடிசூட்டுகிறார். ஞானமாகிய அலங்கார கிரீடத்தால் உன்னை அலங்கரிக்கிறார் அல்லேலூயா!

"நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்" (ஏசாயா 62:3).

சாபத்தின் கிரீடமும், ஆசீர்வாதத்தின் கிரீடமும்!

ஒரு முறை ஜெர்மன் நாட்டு இளவரசன் ஒருவன், இங்கிலாந்து தேசத்தைச் சுற்றிப் பார்க்கும்படியாக வந்தான். தேசம் முழுவதையும் சுற்றிப்பார்த்துவிட்டு முடிவில் இங்கிலாந்து தேசத்தை அரசாட்சி செய்த ராஜாக்களின் அரண்மனையைக் கண்டான். பக்கிங்காம் என்ற இடத்தில் வரலாற்று புகழ்மிக்க ராஜா அரண்மனை இருக்கிறது. உள்ளே ஒரு நீண்ட அறையிலே இங்கிலாந்து தேசத்தை அரசாண்ட எல்லா ராஜாக்களின் உருவப் படங்களும் பெரியதாக வைத்திருக்கிறதைக் கண்டான்.

ஒவ்வொரு ராஜாவின் தோற்றமும் அவனுடைய இருதயத்தைக் கவர்ந்தது. அவர்களுடைய உடைகள், அலங்காரங்கள் அவனுடைய கண்களைப் பறித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒவ்வொரு ராஜாவின் தலையிலும் சூடியிருந்த கிரீடத்தின் அழகு வீசேஷமாக இருந்தது. ஒவ்வொரு கிரீடத்தையும் அவன் நீண்ட நேரம் உற்று கவனித்துக்கொண்டே இருந்தான். ஒவ்வொரு கிரீடத்திலும் சிலுவை அடையாளம் காணப்பட்டது. தங்கத்தினால் செய்யப்பட்ட அந்த கிரீடத்தில் வைரங்களும், வைடூரியங்களும் பதிக்கப்பட்டிருந்தது.

ராஜாக்கள் அணிந்திருந்த அந்தக் கிரீடத்தைப் பார்த்துவிட்டு, பின்பு அங்கிருந்து ஒரு சிறிய ஆலயத்திற்குள் வந்தான். அங்கே ஆல்டரில் இயேசு சிலுவையில் தொங்குகிற காட்சியைப் பெரிய படமாக வரைந்திருக்கிறதைப் பார்த்தான். ஆனால் அவருடைய தலையிலே முள்முடி சூட்டப்பட்டிருந்தது. சரீரமெல்லாம் இரத்தம்வழிகிற காட்சியாகக் காணப்பட்ட அந்தப் படத்தைப் பார்த்தவுடன்

அவன் திகைத்துப்போனான். அவன் தன்னோடுகூட வந்த வழிகாட்டியைப் பார்த்து "யார் இவர்? ஏன் அவருடைய தலையிலே முள்முடி சூட்டப்பட்டிருக்கிறது? ஏன் இவர் இரத்தம் சிந்தின வண்ணமாகவே இருக்கிறார்?" என்று பதறிப் போய் கேட்டான்.

அதற்கு அந்த வழிகாட்டி: "இவர்தான் இயேசுகிறிஸ்து; இவர் நாம் செய்த அக்கிரமக்களினால் முள்முடிசூட்டப்பட்டார்: நம்மை உயர்த்தி மேன்மைப்படுத்தும்படிக்கு அவர் தம்மை மிகவும் தாழ்த்தினார்; இங்கிலாந்து தேசத்தின் மேன்மைக்கெல்லாம் அவர்தான் காரணம்" என்று சொன்னான்.

அந்த இளவரசன் சிலுவைக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தான். அந்தச் சிலுவையின் அடிவாரத்தில் ஒரு வாசகம் எழுதப்பட்டிருக்கிறதை அவன் கவனித்தான். "உனக்காக நான் மரித்தேனே; எனக்காக நீ என்ன செய்தாய்?" என்பதே அந்த கேள்வி. அந்த வார்த்தைகள் அந்த இளவரசனின் இருதயத்தை உடைத்தது. அவனே அறியாமலேயே முழங்கால்படியிட்டான்; முள்முடி வேந்தரை தனது இரட்சகராய் ஏற்றுக் கொண்டான்.

ஆம். அந்த கிறிஸ்து நம்மை கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டும்படி, தாம் முள்முடி சூட்டப்பட மகிழ்ச்சியோடு ஒப்புக் கொடுத்தார்.

1. **முள்முடி மன்னன்:-**

கல்வாரிச் சிலுவையிலே இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள்! முள்முடி சூட்டப்பட்டவராய் காட்சியளிக்கிறார். அவருக்கு அழகும் இல்லை; சவுந்தரியம் இல்லை; நாம் அவரைப் பார்க்கும்போது விரும்பத்தகாத ரூபம் அவருக்கு இருந்தது.

ஏன் அவர் முள்முடி சூட்டப்பட்டார்?

வேதம் சொல்லுகிறது: "சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி: "யூதருடைய ராஜாவே, வாழ்க!" என்று அவரை வாழ்த்தி,

அவரைச் சிரசில் கோலால் அடித்து, அவர்மேல் துப்பி, முழங்கால்படியிட்டு அவரை வணங்கினார்கள்"

(மாற்கு 15:17-19).

ஏன் இயேசு கிறிஸ்துவுக்கு இத்தனை கொடுமையான வேதனைகள்? ஏன் அவருக்கு இந்தப் பாடுகள்? முள்முடி சூட்டப்படுவதற்கு அவர் என்ன தவறு செய்தார்? நன்மை செய்கிறவராய் தானே அன்புடன் சுற்றித்திரிந்தார்? மன துருகி வியாதியஸ்தர்களையெல்லாம் சுகமாக்கினார்! கண் தெரியாத குருடர், காது கேளாத செவிடர், பாளயத்திற்குப் புறம்பே தள்ளப்பட்ட குஷ்டரோகிகள் எல்லோரும் அற்புத சுகம் பெற்றார்களே! அப்படியிருக்க இயேசுவை ஏன் முள்முடி சூட்டி சிலுவையிலே கொலைசெய்தார்கள்?

நம்மை நன்மையினாலும், கிருபையினாலும் முடிசூட்டுகிற கர்த்தருக்கு இந்த முள்முடி ஏன்? என்று சற்று தியானித்துப் பாருங்கள்! ஏன் அவர் அந்த அகோரப்பாடுகளின் வழியாக கடந்து சென்றார்?

இஸ்ரவேல் தேசத்திலே 24 வகையான முட்கள் இருந்தன. அந்த முள்வகைகளிலே மிகவும் கொடுமையான முள்தான் ''பினா கிறிஸ்டி' என்று சொல்லப்படுகிற முள் வகை. இது ஆணியைப்போன்று உறுதியாகவும், ஊசியைப் போன்று கூர்மையுடையதாகவும் விளங்கும். அப்படிப்பட்ட முள் வகையையே இயேசு கிறிஸ்துவுக்குச் சூடும்படியாகத் தெரிந்துகொண்டார்கள்.

இந்தியாவிலும்கூட பலவகையான முட்களைப் பார்க்கிறோம். முட்கள் குத்தும்போது தாங்க முடியாத வேதனை அடைகிறோம். சில முட்கள் விஷத்தன்மையுடையது; காலில் அந்த முட்கள் தைக்கும்போது, முள் குத்தின வேதனையோடு கூட, முள்ளில் இருக்கும் விஷத்தன்மை காலுக்குள் இரங்கி இன்னும் அதிகமான வேதனைக் கொடுக்கும். வேலிக்காத்தான் முள், சீமை உடைமுள் குத்தினால் நமக்கு எவ்வளவு பாடாய் இருக்கிறது!

இயேசுவின் தலையில் அந்த முள்முடியைப் பின்னி மெதுவாகப், பூப்போல, பொன்போல வைத்தார்கள் என்று நாம் எண்ணவேகூடாது. அந்த வேளை ஒரு அந்தகாரத்தின் வேளை; பாதாளத்தின் வல்லமைகள் கட்டவிழ்க்கப்பட்டிருந்த ஒரு வேளை: வான மண்டலத்தின் பொல்லாத ஆவியின் சேனைகள் கிறிஸ்துவின்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள இறங்கின வேளை.

வரலாற்று ஆசிரியர்கள், இயேசுவைச் சூழ 600 போர்ச் சேவகர்கள் நின்றதாகக் குறிப்பிடுகிறார்கள். அவர்களால் இயேசு நிந்தைகளையும், அவமானங்களையும் சகிக்கவேண்டியதாயிற்று. முள்முடியை அவருடைய தலையிலே வைத்து அழுத்தின அந்தப் போர்ச் சேவகர்கள் தங்கள் கைகளிலே உள்ள கோலினால் அவருடைய தலையிலே மாறி மாறி, ஓங்கி ஓங்கி அடித்திருந்திருப்பார்கள். அந்த முட்கள் கிறிஸ்துவின் பொன்னான தலைக்குள் ஆழமாக இறங்கியிருந்திருக்கும். குத்தப்பட்ட ஒவ்வொரு இடத்திலிருந்தும் இரத்தம் பீறிட்டு வெளியே வந்திருக்கும். கிறிஸ்து எத்தனை அகோரமான வேதனையை அடைந்திருப்பார் என்று யோசித்துப்பாருங்கள்!

சில புத்தகங்களை நான் வாசித்தபோது இயேசுவின் தலையிலே சூட்டப்பட்ட முட்கள் தலையின் வழிவாக உள்ளே இறங்கி கண்களின் வழியாக புடைத்துக்கொண்டு வந்தது என்று வாசித்தேன். இரத்தக் கறைபடிந்த கண்களோடு மங்கிய நிலையில் அவர் ஜனங்களைப் பார்த்திருப்பார். அவருடைய முகத்திலெல்லாம் இரத்தம் ஆறாக ஓடியிருந்திருக்கும்.

முள்முடி சூட்டப்பட்ட இயேசுவை அருகிலிருந்த யோவான் பார்த்து கதறி, கதறி அழுது இருந்திருப்பான். ஏன் என் இயேசு முள்முடி சூட்டப்பட்டார்? ஏன் இவருக்கு இந்த அநீதியான கொடுமை? இயேசு என்ன தவறு செய்தார்? மக்கள் மேல் மனதுருகினாரே, அது தவறா? பசியோடு இருந்த ஐயாயிரம் பேரை போஷித்தாரே, அது தவறா? மரித்தவர்களையெல்லாம் ஜீவனோடு எழுப்பினாரே, அது தவறா ஏன் இயேசுவுக்கு இந்த முள் கிரீடம்?

இயேசுவின் பாடுகளைச் சற்றே சிந்தித்துப்பாருங்கள்! அவருடைய காயங்களைத் தியானித்துப் பாருங்கள்! முள்முடி சூட்டப்பட்ட அவருடைய சிரசின் வேதனைகளையெல்லாம் தியானித்துப் பாருங்கள்!

1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டம் வெடித்தபோது சில மாணவர்கள் நான் தங்கியிருந்த அறைக்குள் வந்து புகுந்தனர்; துரத்திக் கொண்டிருந்த போலீசார் நான் இருந்த அறைக்குள்ளும் வந்துவிட்டனர்; கண் மூக்கு தெரியாமல் எங்களை அடி அடி என்று அடித்து நொறுக்கினர். ஒரு போலீஸ்காரன் தன் கையில் வைத்திருந்த கோலினால் என்னுடைய தலையில் ஓங்கி அடித்தபோது என்னுடைய மண்டை உடைந்து இரத்தம் கொட்ட ஆரம்பித்தது. காலையில் இருந்து இரவு வரையிலும் இரத்தம் வழிந்துகொண்டே இருந்தது. அன்று இரவு நான் மத்திய சிறைசாலையிலே அடைக்கப்பட்டபோது என்னுடைய நண்பன் என்னைத் தூக்கி தன்னுடைய மடியிலே வைத்து நான் மரித்துப் போவேன் என்று எண்ணி வீட்டிற்கு ஏதாவது சொல்ல வேண்டுமா? என்று விசாரிக்க ஆரம்பித்தான். ஒரு அடியைக்கூட தாங்க முடியாத அளவிற்கு என்னுடைய சரீரம் இரத்தத்தைக் கொட்டினது. அந்த இரவு அவசர சிகிச்சை கொடுக்கப்பட்டு, என்னுடைய தலையில் தையல் போடப்பட்டதால் காப்பாற்றப்பட்டேன். ஒரு அடிக்கே இத்தனை பாடு என்றால், இயேசு கிறிஸ்துவைச் சூழ ஏறக்குறைய ஆறு நூறு ரோமாபுரி போர் வீரர்கள் மூர்க்கமாய் மாறி, மாறி அடித்திருந்தால் கிறிஸ்துவின் தலை எத்தனை ரணக்களமாய் இருந்திருக்கும்!

இயேசுவின் அருகே கள்ளர்கள் சிலுவையில் அறையப்பட்டார்கள். ஆனால் அவர்களுக்கு முள்முடி சூட்டப்படவில்லை. இயேசு கிறிஸ்துவுக்குதான் முள்முடிசூட்டப்பட்டிருந்தது.

ஒருவேளை சாத்தான் இயேசுவைப் பார்த்து இப்படி சொல்லியிருந்திருப்பான்: ''நீர் உம்முடைய பிள்ளைகளை நன்மையினாலும், கிருபையினாலும் முடிசூட்டுகிறீர் அல்லவா!

இதோ, உமக்கு மனுக்குலத்தின் பரிசு! நீர் உம்முடைய ஜனத்தை கனத்திலைலும், மகிமையினுலும் முடிசூட்டினீர் அல்லவா! இதோ அவமானத்தையும், நிந்தையையும் பரியாசத்தையும் அனுபவியும்; நீர் யூதருக்கு ராஜாவல்லவா! உமக்கு இந்தக் கிரீடம் பொருத்தமானதுதான் என்று கேலி செய்திருந்திருப்பான். ஏன் கிறிஸ்துவுக்கு அந்த முள்முடி?

நான் புத்தகங்களை அச்சிடுகிற அச்சகம் ஒன்றிலே ஒரு கம்யூனிஸ்ட் தோழனும் தன்னுடைய புத்தகங்களை அச்சிடும்படி வந்திருந்தான். என்னுடைய புத்தகங்களை அச்சிட்ட பிறகு அந்தத் தோழன் எழுதின கவிதைகள் எல்லாவற்றையும் வாசித்துக்கொண்டே வந்தேன். அதில் ஒரு கவிதை என்னுடைய இருதயத்தை மிகவும் தொட்டது. அந்தக் கவிதையின் தலைப்பு 'இயேசுவே நீர்தான் முதல் கம்யூனிஸ்ட்' என்று எழுதப்பட்டிருந்தது. நான் அதை ஆர்வத்தோடு கூட வாசித்தேன். அந்தக் கவிஞன் அப்படிச் சொல்லுவதற்குக் காரணம் என்னவென்று தெரிந்துகொள்ளத் தீர்மானித்தேன். அவன் இயேசுவை சிலுவையிலே அறையப்பட்டவராக அங்கே பார்த்திருக்கிறுன். அவருக்கு ஏன் தலையில் அந்த முள்முடியைச் சூட்டிஞர்கள் என்று தெரியவில்லை: அவன் பலமுறை யோசித்து சிந்தித்துப் பார்த்தான்; அவனுக்கு ஒன்றும் புரியவில்லை; அவன் ஒரு கவிஞன் அல்லவா, தன்னுடைய கற்பனைகளையெல்லாம் சிறகடித்துப் பறக்கவிட்டான்.

முடிவில் அவன் எழுதுகிறுன் ''இயேசுவே, முட்கள் எங்கள் கால்களில் தைக்கக்கூடாது என்பதற்காகவா தரையிலே கிடந்த முட்களையெல்லாம் பொறுக்கி எடுத்து உம்முடைய தலையிலே கூடு கட்டிக்கொண்டீர்: நீர்தான் ''முதல் கம்யூனிஸ்ட்.'' என்று அந்தக்கவிதையை எழுதியிருந்தான். நான் அதை வாசித்தபோது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. அந்தக் கவிதையில் ஒரு உண்மை இருக்கிறதை அறிந்து கொண்டேன்.

எங்கள் பாதைகள் சுத்தமாய் இருக்க வேண்டும், எங்கள் கால்களை முட்கள்தைத்து வேதனைப்படுத்தக்கூடாது, எங்கள்

கால்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்று கிறிஸ்து எண்ணி னது மாத்திரமல்ல, அந்த முட்களின் வேதனையைத் தன் னுடைய தலையில் அவர் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்; முள்முடி சூட்டப்பட ஒப்புக்கொடுத்தார்: வேதனையை அவர் ஏற்றுக்கொண்டு நம்மை விடுதலையாக்கச் சித்தங் கொண் டார்; சாபத்தை அவர் ஏற்றுக் கொண்டு நம்மை ஆசீர் வதிக்கச் சித்தம்கொண்டார்; முள் கிரீடத்தை அவர் ஏற்றுக் கொண்டு கிருபையும், இரக்கமுமான கிரீடத்தை நமக்குச் சூட்ட சித்தம் கொண்டார். எத்தனை கிருபை!

2. வேதனையான முட்கள்:- கர்த்தர் உலகத்தைச் சிருஷ்டித்தபோது அதில் அவர் முள்ளை உண்டாக்கவே இல்லை. ஏதேன் தோட்டத்தில் முட்செடிகள் வளர்ந்ததும் இல்லை.

மனுஷனுக்கு நன்மையான ஈவுகளையும் கர்த்தர் கொடுத்து, கனிவர்க்கங்களையும், சுவைமிக்க பழங்களையும், வாசனை வீசும்மலர்களையும் உண்டாக்கினாரே தவிர, மனுஷனை வேதனைப்படுத்தக்கூடிய எந்தபொருளையும் அவர் உண்டாக்க வில்லை. அழகிய பறவைகள் பறந்து திரிந்தன; வண்ணத்துப் பூச்சிகள் உல்லாசமாய் சிறகடித்தன; இனிய நறுமணமும், செவிகளில் தேனாய் பாயும் இயற்கையின் ரீங்கார சப்தங்கள் தான் அங்கே ஒலித்துக் கொண்டே இருந்தது. அங்கே கவலையோ,கண்ணீரோ, துயரமோ, துக்கமோ, முட்களோ, வேதனைகளோ இல்லை.

ஆனால் மனுஷன் பாவம் செய்தபோது அந்தப்பாவத்தின் நிமித்தம் பூமி சபிக்கப்பட்டது. மனுஷனை வியாதியும், மரணமும் வந்துபிடித்தது. மனுக்குலம் வேதனையோடு பிள்ளை பெறவேண்டியதாயிற்று.

மட்டுமல்ல, கர்த்தர் அன்றைக்கு ஆதாமைப் பார்த்துச் சொன்னார்: ''பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதன் பலனை புசிப்பாய், அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப் பிக்கும் என்றார்'' (ஆதி. 3:17,18)

ஆம், பாவத்தின் விளைவாகத்தான் பூமியிலே முள் தோன்றினது. முள் என்றாலே அது சாபத்தைக் குறிக்கும். தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதினால் வந்த நியாயத் தீர்ப்பைக் காண்பிக்கிறது. நம்மைச் சூழ்ந்து இருக்கும் பல வகையான முட்களைப் பார்க்கும்போது அந்த முட்களில் இருந்து ஒரு எச்சரிப்பின் சப்தத்தை உணர்ந்துகொள்ளு வோமா?

மனுஷன் பாவம் செய்யும்போது சிற்றின்பத்திற்காக, கொஞ்ச நேரம் ஆனந்தத்திற்காக ஓடுகிறான். ஆனால் பாவத் தின் தண்டனை அவன் மேல் முள்ளாய் மாறி, அவனுடைய இருதயத்தைப் பிளக்கும்போதுதான், பாவத்தின் அகோ ரத்தை அவனால் உணரமுடிகிறது.

ஒருமுறை தென்னாற்காடு மாவட்டத்திற்கு நான் ஊழியத்திற்காகச் சென்றிருந்தபோது, ஒருதாய் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் தன்னுடைய இரண்டு குழந்தைகளையும் கண்ணீரோடு எனக்குக் காண்பித்தார்கள். ஒரு குழந்தைக்கு 17 வயது; அடுத்த குழந்தைக்கு 15 வயது. இரண்டு குழந்தைகளும் மூளை வளர்ச்சி இல்லாமல், தெளி வான பார்வை இல்லாமல், ஊமையாய், பரிதாபமாய், முன் அறையில் உட்கார்ந்திருந்தன. அதைப் பார்த்ததும் என்னுடைய இருதயம் உடைந்தது; ஏன் இந்தப் பிள்ளை களுக்கு இந்த நிலைமை என்று என்னுடைய உள்ளம் அங்கலாய்த்தது.

அந்தத் தாயார் சொன்னார்கள், "ஐயா, எங்களுக்குப் பிறந்ததே இந்த இரண்டு குழந்தைகள்தான். இந்த இரண்டு குழந்தைகளும் பிறந்தவுடன் என்னுடைய கணவன் மரித்து விட்டார். நான் ஒரு பள்ளியில் ஆசிரியையாய் பணியாற்றிக் கொண்டு இத்தனை ஆண்டுகளும் இந்தக் குழந்தைகளை வளர்த்துவந்தேன். எனக்குப் பிறகு இந்தக் குழந்தை களுடைய நிலைமை என்னவாகும்? அந்த நினைவுதான் என் னுடைய உள்ளத்தை முள்ளாய் குத்திக்கொண்டே இருக் கிறது" என்றார்கள்.

அதைக் கேட்ட நான் அதற்காக மனம் உடைந்து ஜெபித்தேன். ஆண்டவரே இரக்கம் பாராட்டமாட்டீரோ? மனமிரங்கி பிள்ளைகளைச் சுகமாக்கமாட்டீரோ? என்று மன்றாடினேன்.

அந்த வீட்டை விட்டு வெளியே வந்தவுடன் ஒரு சகோதரன் என்னைப்பார்த்து சொன்னான், ''அந்த வீட்டிற்காகவா நீங்கள் இவ்வளவு பாரம் எடுத்து கண்ணீரோடு ஜெபித்தீர்கள்? ஏன் அந்தப் பிள்ளைகள் அந்த நிலைமையில் இருக்கிறார்கள் தெரியுமா? ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்பு அந்தப்பிள்ளைகளின் தாயார் இந்த ஊரில் பயங்கரமான விபச்சாரியாய் இருந்தாள். அவளால் இந்த ஊரில் கெடுக்கப்பட்ட வாலிபர்கள் ஏராளம்; உடைந்த குடும்பங்கள் ஏராளம்; அவளால் மனம் உடைந்து கண்ணீர்சிந்தின மனைவிமார் ஏராளம்; அவள் செய்த பாவம் இப்பொழுது சாபமாய் அவளுடைய கண்களுக்கு முன்பாக முட்களாய் இருக்கிறது'' என்றார்கள்.

எண்ணாகமம் 33:55 சொல்லுகிறது ''உங்கள் கண்களில் முள்ளுகளும், உங்கள் விலாக்களிலே கூர்களுமாயிருந்து நீங்கள் குடியிருக்கிற தேசத்திலே உங்களை உபத்திரவப்படுத்துவார்கள்''.

துணிகரமான பாவங்களே பிற்காலத்தில் சாபங்களாகி முட்களாய் மாறுகிறது, பாவங்களை நம்மை விட்டு எவ்வளவு துரிதமாக அகற்ற முடியுமோ அவ்வளவு துரிதமாக நாம் அகற்ற வேண்டும். நம்முடைய மீறுதல்களை நம்மை விட்டு நீக்கிப் போட வேண்டும். எந்தச் சாபமும் நம்மைப் பின் தொடராதபடி நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

கானான் தேசத்திலே புற ஜாதியார் இருக்கக் கூடாது என்று யோசுவா வைராக்கியமுடையவனாய் அவர்களைத் துரத்தியடித்தான். புற ஜாதியார் என்று சொல்லுவது ஆவிக்குரிய அர்த்தத்தில் பாவங்களைக் குறிக்கிறது. யோசுவா மரணமடைவதற்கு முன்பு இஸ்ரவேலரைப்

பார்த்து புறஜாதியார் உங்களுக்குக் கண்ணியாகவும், வலை யாகவும் உங்கள் விலாக்களுக்குச் சவுக்காகவும், உங்கள் கண்களுக்கு முள்ளுகளாகவும் இருப்பார்கள் என்றும் நிச்சய மாய் அறியுங்கள்" என்றான் (யோசுவா 23:13).

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு கிராமத்திற்கு ஊழி யத்திற்காகச் சென்றிருந்த போது ஒரு வீட்டிற்கு என்னை ஜெபத்திற்காக அழைத்தார்கள். அங்கிருந்த மூன்று பிள்ளைகளும் கண் தெரியாத குருடர்களாய் இருந்தார்கள். அந்த வீட்டிற்குள் நுழைந்தவுடனேயே ஒரு சாபமாகிய முள் அங்கிருக்கிறது என்பதை உடனே உணர்ந்து கொள்ள முடிந்தது.

உடனே கண் தெரியாத அந்தப் பிள்ளைகளின் பெற்றோ ரைக் குறித்து விசாரிக்க ஆரம்பித்தேன், அவர்கள் சொன் னார்கள் "ஐயா, அதைப்பற்றி விசாரிக்காதீர்கள்; ஏனென்றால் அவர்கள் அவ்வளவு துன்மார்க்கர்கள்; தகப்பனார் பஞ்சா யத்து தலைவராகவும், கிராம முன்சீப்பாகவும் இருந்தபடி யினால் ஏழைகளுடைய எல்லா நிலங்களையும் அநியாயமாய் அபகரித்துக் கொண்டார்; எதற்கெடுத்தாலும் அடி, தடி, கொலை, கொள்ளை என்பதாகவே இருந்தது. அவர்கள் செய்யாத அட்டூழியங்களே இல்லை; இப்பொழுது அவர் களுடைய கண்களுக்கு முன்பாக அவர்களது மூன்று பிள்ளை களும் குருடர்களாய்; பெற்றோர்களுக்கு முன்பாக முட் களாய் இருக்கிறார்கள். இவர்கள் மற்றவர்களுக்கு ஒரு எச் சரிப்பாய் நின்று கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

இன்னொரு சகோதரனைத் தூத்துக்குடியில் சந்தித்தேன். அவர் சரீரம் முழுவதும் நோய்களாலும், வியாதிகளாலும் நிரம்பியிருந்தது. அவருடைய கை ஒன்று வளைந்தும் இருந்தது. அவர் முட்களின் மத்தியிலே லீலி புஷ்பத்தைப் போல கர்த்தரை அண்டிக் கொண்டிருந்தார். ஒருநாள் மிகுந்த கண்ணீரோடு, ஆண்டவரை நோக்கி, "ஆண்டவரே எனக்கு ஏன் இந்த முட்கள்? ஏன் இந்தப் பாடுகள்?" என்று கதறி அழுதாராம்.

கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு ''மகனே, உன்னுடைய முற்பிதாக்களின் கிரியைகளை யெல்லாம் நீ உணர வேண்டுமென்று நான் விரும்புகிறேன் என்று சொல்லி, அவருடைய முன்னோர்களுக்கு முன்பாக அவருக்கு முன்னால் இருந்த ஆறு தலைமுறையிலுள்ள அக்கிரமங்களையெல்லாம் விவரித்துக் காண்பித்தாராம. அவருடைய அப்பா, அவருடைய தாத்தா, அவருடைய பாட்டன், அவருடைய முற்பாட்டன் ஆகியோரின் பாவங்களை அவர் பார்த்தபோது, மனமுடைந்து பதபதைத்துப் போனார். ''ஆண்டவரே, என்னையும், என்னுடைய குடும்பத்தினரையும் வேதனைப்படுத்துகிற இந்த முட்கள் நியாயமானதுதான்; இது நியாயத் தீர்ப்பின் முள் என்று அறிந்து கொண்டேன். ஆண்டவரே, ஆனாலும் நீர் முள்முடி சூட்டப்பட்ட அந்த நாளை நினைவு கூர்ந்து என்னைக் குணமாக்கும்" என்று கதறினார். அந்த சகோதரன் என்னிடம் சொன்னார், ''ஒரு மத்தியான வேளையிலே என்னுடைய படுக்கையின் மேல் இருந்து நான் ஊக்கமாய் ஜெபித்துக் கொண்டிருந்த போது திடீரென்று தேவ வல்லமை இறங்கினது; என்னுடைய படுக்கையிலிருந்து நான் வீசி எறியப்பட்டேன். அதோடு கூட அந்த நேரத்தில்தானே என்னுடைய கை சுகமாக்கப்பட்டது" என்றார்.

தேவபிள்ளையே, உன்னுடைய குடும்பத்தில், சாபங்களையோ, முற்பிதாக்களின் அக்கிரமங்களையோ நீ சுமந்து திரிகிறாயா? அல்லது உன் பாவங்களை உன் பிள்ளைகள் சுமந்து திரிகிறார்களோ? யோசித்துப்பார்! வேதம் சொல்லுகிறது: ''குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும், மூன்றும், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்''

(யாத். 34:7, எண்ணா. 14:17).

''உங்களில் தப்பினவர்கள் தங்கள் அக்கிரமங்களின்நிமித்தமும், தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினிமித்தமும், உங்கள் சத்துருக்களின் தேசங்களில் வாடிப்போவார்கள்'' (லேவி. 26:39).

உபாகமம் 28-ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்களேன். அங்கே ஆசீர்வாதங்களும், சாபங்களும் இடம்பெறுகின்றன. கர்த்தருக்குக் கீழ்ப்படியாததினால் வருகிற 113 பயங்கரமான சாபங்களை உபா. 28:16-8 வரை வாசிக்கிறோம். தலைமுறை தலைமுறைதோறும் தொடரும் சாபங்கள் இவை!

நமக்கு முன்பாக ஆசீர்வாதமும் இருக்கிறது; சாபமும் இருக்கிறது; முள்ளாலான கிரீடமும் இருக்கிறது; கிருபையின் கிரீடமும் இருக்கிறது. ஆனால் நாமோ கர்த்தருடைய வார்த்தைகளை மீறினபடியினால் சாபத்தையே தெரிந்து கொண்டோம்; முட்களையே நம்முடைய பங்காக்கிக் கொண்டோம்.

அன்புள்ள கிறிஸ்து இந்தச் சாபத்திற்கும், முட்களுக்கும் ஒரு முடிவு கட்ட விரும்பினார். முட்கிரீடத்தை தன்னுடைய தலையில் ஏற்றுக் கொண்டு, கிருபையின் கிரீடத்தை நமது தலையில் சூட்டினார்; சாபத்தை தன் மேல் ஏற்றுக் கொண்டு மனதார நம்மை ஆசீர்வதித்தார். தேவபிள்ளையே! முள்முடி சூட்டப்பட்ட தேவ குமாரனாகிய கிறிஸ்துவின் தலையில் வழிகிற இரத்தத்தை உன்னுடைய கைகளில் ஏந்தி குடும்பத்தின் சாபக் கட்டுகளை முறியடிப்பாயாக.

வேதம் இரண்டு வகையான சாபங்களைக் குறித்துப் பேசுகிறது. ஒன்று நாம் செய்த பாவத்தினால் வருகிற சாபங்கள்; அல்லது நம்முடைய முற்பிதாக்களிடத்திலிருந்து தொற்றிக்கொள்கிற சாபங்கள். அடுத்தது, நியாயப்பிரமாணத்தை அதாவது கர்த்தருடைய கட்டளைகளை மீறுகிறபடியினால் வருகிற சாபங்கள். இரண்டு சாபங்களையும் இயேசுகிறிஸ்து சிலுவையிலே சுமந்து தீர்த்திருக்கிறார். முற்பிதாக்களின் சாபமான முட்களினால் வரும் வேதனையை நீக்குவதற்கு அவர் முட்கிரீடம் சூட்டப்பட்டார். நியாயப்பிரமாணத்தினால் வரும் சாபங்களை நீக்குவதற்காக சபிக்கப்பட்ட சிலுவை மரத்தில் ஜீவனை விட்டார்.

கலாத்தியர் 3:13 சொல்கிறது: ''மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிற

படி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்''. இது எத்தனை கிருபை! கர்த்தர் நம்மேல் வைத்த அன்பு எவ்வளவு பெரியது!

உன்னை ஆசீர்வதிக்கும்படி முட் கிரீடம் சூட்டப்பட்ட கிறிஸ்து உன்னை ஆசீர்வதியாமல் இருப்பாரோ? உனக்காகத் தலையெல்லாம் இரத்தம் வழிய ஒப்புக் கொடுத்தவர் உன்னைக் கைவிடுவாரோ? உனக்காக சிலுவை மரத்தில் சாபமானவர், உன்னுடைய சாபக்கட்டுகளை முறிக்காமல் இருப்பாரோ? அவர் உனக்காக வழக்காடி யுத்தம் செய்து உன்னை நன்மையினாலும், கிருபையினாலும் முடிசூட்டுவார்

அல்லேலூயா!

தாவீது அன்றைக்குக் கல்வாரியைத் தூரத்தில் பார்த்து ''கர்த்தர் எனக்காக யாவையும் செய்துமுடிப்பார்'' என்று ஏக்கத்தோடுகூட சொன்னார் (சங். 138:8). ஆம், கர்த்தர் உனக்காக யாவையும் செய்துமுடிப்பார்.

சாபத்தின் கிரீடத்தை இயேசு ஏற்றுக் கொண்டபடியினால் உன்னை ஆசீர்வதிக்க அவர் கிருபையுடையவராய் இருக்கிறார்! நீ ஆசீர்வதிக்கப்படுவாய். தேவனுடைய ஆசீர்வாதங்கள் உனக்கு கிரீடத்தைப்போல இருக்கும். உன்னிமித்தம் உன்னுடைய குடும்பமும் ஆசீர்வதிக்கப்படும்.

''விசுவாசமார்க்கத்தார் ஆசீர்வதிக்கப்படுவார்கள்" (கலா. 3:9). கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் கர்த்தர் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் (எபேசி. 1:3). அன்றைக்கு இயேசு தன்னுடைய சீஷர்களைப் பெத்தானியாவரைக்கும் அழைத்துக் கொண்டு தம்முடைய கைகளை உயர்த்தி அங்கே ஆசீர்வதித்ததைப்போல (லூக். 24:50). இப்பொழுதே இந்தப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிற இந்தத்தருணத்தில்தானே இயேசுக் கிறிஸ்து உங்களுடைய அருகிலே கடந்து உங்களை ஆசீர்வதிக்கிறார்.)நீங்கள் ஆசீர்வாதமாய் இருப்பீர்கள்.

இனி ஒரு சாபமும் இராது (வெளி. 22:3). இனி ஒரு துக்கமும் இராது; எந்த வேதனையையும் நம்முடைய இருதயத்தைப் பிழிய கர்த்தர் அனுமதிக்கவே மாட்டார். தேவன் உங்களுக்குத் தந்தருளிள ஆசீர்வாதமான கிரீடத்திற்காக நன்றியோடு ஸ்தோத்தரியுங்கள். உங்களுக்காக முள்முடி சூட்டப்பட்ட கர்த்தருடைய பாதங்களை தாழ்மையோடு என்றென்றும் பற்றிக் கொள்ளுங்கள். கர்த்தர் நிச்சயமாகவே உங்களை ஆசீர்வதிப்பார்.

நீதியின் கிரீடம்!

"இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" (II தீமோ 4:8).

தன்னுடைய ஓட்டத்தின் இறுதிப் பகுதியிலே அப்போஸ்தலனுகிய பவுல் மிகவும் மகிழ்ச்சியோடுகூட தன்னுடைய ஆவிக்குரிய மகனுகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" என்று எழுதுகிருர். "நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்று குறிப்பிடுகிருர் (II தீமோ 4:8).

இரண்டு கிரீடங்கள் நமக்கு முன்னுல் வைக்கப்பட்டிருக்கிறது. ஒன்று அநீதியின் கிரீடம்; மற்றது நீதியின் கிரீடம்.

நாம் நியாயப்படி தண்டிக்கப்படவேண்டுமானுல் அநீதியின் கிரீடத்தைத்தான் சூட்டிக்கொள்ள வேண்டும். ஏனென்ருல் நீதிமான் ஒருவனும் இல்லை என்று வேதம் திட்டமும், தெளிவுமாய் கூறிவிடுகிறது (ரோமர் 3:10). மட்டுமல்ல, எந்த மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினுலே, நீதிமானுகவும் முடியாது" (ரோ 3:20).

அப்போஸ்தலனுகிய பவுலின் ஆரம்ப காலத்தை யோசித்துப் பாருங்கள். அப்பொழுது அவர் பெயர் சவுல். அவருடைய வேலையோ கிறிஸ்தவர்களை ஒடுக்கி நிர்மூலமாக்குவதுதான். ஸ்தேவான் கல் எறிந்துகொல்லப்பட்டதில் இந்தச் சவுலுக்கும் ஒரு பங்கு இருந்தது; மட்டுமல்ல, அவன் கர்த்தருடைய சீஷர்களைப் பயமுறுத்தி கொலை செய்யும்படி சீறி பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய் நிருபங்களைக்

கேட்டு வாங்கினான் (அப் 9:1). ஏழைக் கிறிஸ்தவர்களை ஒடுக்குகிறது எத்தனை பெரிய அநீதி! இப்படிப்பட்டவர்களின்மேல் தேவனுடைய கோபாக்கினை எவ்வளவு அதிகமாய் இருந்திருக்கவேண்டும்?

அப்படிப்பட்ட அவர், ''நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது'' என்று அவ்வளவு உறுதியாக, வைராக்கியமாக சொல்லுவதின் காரணம் என்ன? அவரை நீதிகரித்தவர் யார்? அவருக்கு நீதியின் வஸ்திரங்களை உடுத்தி, நீதியின் கிரீடத்தைச் சூட்டுகிறவர் யார்?

அவர்தான் இயேசு கிறிஸ்து! நமக்காக அநீதியாகி, அநீதியின் சின்னமாக முட்கிரீடத்தைச் சூட்டிக்கொண்டு, நமக்கு நீதியின் கிரீடத்தைத் தருகிறவர்! அல்லேலூயா!

நமக்கு நீதியின் கிரீடத்தைத் தரும்படி அவர் அநீதியின் கிரீடத்தைத் தெரிந்து கொண்டார். அவரிடத்தில் எந்தப் பாவமும் இல்லை; அவர் எந்த அநீதியும் செய்யவும் இல்லை; அவர் குற்றமில்லாதவராகப், பாவம் அறியாதவராய் ஜீவித்தார்.

ஏசாயா தீர்க்கதரிசி சொல்லுகிறார் ''அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததும் இல்லை'' (ஏசா 53:9).

அவரை விசாரித்த பிலாத்து, தன்னுடைய கைகளைக் கழுவி இவரிடத்தில் எந்தக் குற்றமும் இல்லை என்று சாட்சி கொடுத்தான்: இயேசு சிலுவையில் அறையப்பட்ட அந்த நாளில் நூற்றுக்கு அதிபதி, ''மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்'' என்று வெளிப்படையாக எல்லோருக்கும் முன்பாக அறிவித்தான்.

ஒருவேளை இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடத்தின் அருகிலுள்ள மரங்களுக்கு வாய் இருந்திருக்குமென்றால் இயேசுவுக்கு சிலுவையில் கொடுக்கப்பட்ட தண்டனையை அநீதியான தண்டனை என்று சத்தமிட்டு முழங்கியிருந்திருக்கும். மண், கற்களெல்லாம்கூட இயேசு சிலுவையில் அறை

யப்பட்டது மிகவும் அநீதியான செயல் என்று கூக்குரலிட்டிருக்கும்.

பாவம் அறியாத அவர் நமக்காகப் பாவமானூர்; அநீதி செய்யாத அவர் நமக்காக அநீதியானூர்; நீதிமானுன அவர் நமக்காக தண்டனைக்குள்ளானூர்.

''குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி'' என்று பேதுரு (I பேதுரு 1:9)-ல் விளக்குகிறூர். ''அவர் பாவம் செய்யவில்லை; அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவும் இல்லை'' (I பேதுரு 2:2).

இதை நீங்கள் தெளிவாய் புரிந்துகொள்ள வேண்டுமென்ருல் I பேதுரு 3 ஆம் அதிகாரம் 18 ஆம் வசனத்தை ஜெபத்தோடு தியானித்துப் பாருங்கள். அந்த வசனம் இவ்விதமாய் சொல்லுகிறது: ''கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராகப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார் அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்''.

அநீதியுள்ளவர்களை நீதிகரிக்கும்படி; அநீதியான கந்தையை நீக்கிவிட்டு, நீதியாகிய சால்வையைத் தரிக்கும்படி; பாவ பாரங்களை நீக்கிவிட்டு நம்மைப் பரிசுத்தவான்களாக மாற்றும்படி, தன்னை ஒப்புக்கொடுத்தார்.

இயேசுவின் சீஷர்களெல்லாம் தூரத்தில் நின்று பார்த்து கிறிஸ்துவுக்குச் செய்யப்படுவது ''அநீதி'' என்று உணர்ந்தார்கள். ஆனுலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஏன் இந்த அநீதி? ஏன் இயேசுவுக்கு அநீதியான இந்த முட்கிரீடம்? இதை நான் ஒரு சிறு கதையின் மூலமாக உங்களுக்கு விளக்க விரும்புகிறேன்.

ஒரு ஊரில் ஒரு அண்ணனும், தம்பியும் ஒன்ருய் வாழ்ந்துவந்தார்கள். அண்ணன் மிகவும் பக்திமான். வேதத்தையும், கர்த்தரையும் அளவில்லாமல் நேசிக்கிறவன். ஆனல் தம்பியோ ஒரு துன்மார்க்கன்; கொலை குற்றங்

களுக்கு அஞ்சாதவன். அண்ணன் தம்பியைத் திருத்துவதற்கு எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தான்; ஆனால் முடியவில்லை. தம்பிக்குச் சொன்ன ஆலோசனைகள், தம்பியைத் திருத்துவதற்காய் எடுத்த ஒவ்வொரு முயற்சிகள், எல்லாம் நிழலுக்கு இறைத்த நீரைப் போலானது.

ஒரு நாள் அண்ணன் தன் வீட்டில் தனியாய் ஜெபித்துக் கொண்டிருந்த போது வீட்டுக் கதவு மிகவும் வேகமாய் தட்டப்படுகிறதைக் கேட்டு எழுந்துபோய் கதவைத் திறந்தான். அங்கே அவன் கண்ட காட்சி... அவனுடைய இருதயத்தை புண்ணாக்கினது; வெளியே தம்பி கையில் இரத்தக் கரைபடிந்த துணியுடனும் கூரிய கத்தியுடனும் நின்று கொண்டிருக்கிறதைக் கண்டான். ஒரே நிமிடத்தில் தம்பியினுடைய நிலைமையை அண்ணனால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆம், தம்பி யாரையோ கொலை செய்துவிட்டு உயிருக்குப் பயந்து ஓடிவந்திருக்கிறான்.

தம்பியை அண்ணன் உள்ளே அழைத்தான்; "தம்பி, உன்னுடைய வஸ்திரத்தை உடனே கழற்று; அந்தக் கத்தியைக் கீழே போடு; இதோ என்னுடைய வஸ்திரத்தைத் தரித்துக்கொள்; என்று சொல்லி மிகவும் வேகமாக வீட்டின் பின்புறமுள்ள கதவின் வழியாக மதில் ஏறி ஓடிவிடு" என்றான். தம்பி ஓடிப்போகும் போது அண்ணன் அவனைப் பார்த்து, "தம்பி, கடைசியாய் ஒன்றைச் சொல்லுகிறேன். என்னுடைய பரிசுத்தமான, நீதியான வஸ்திரத்தை இனி ஒருபோதும் கறைபடுத்திவிடாதே" என்று சொல்லி அனுப்பினான்.

தம்பி ஓடி மறைந்த மறுவினாடியில் அந்த அண்ணன், தம்பியின் வஸ்திரத்தை தான் உடுத்திக்கொண்டு தம்பி கீழே போட்ட கத்தியைத் தன்னுடைய கையில் எடுத்துக் கொண்டான். அதற்குள் வீட்டின் கதவு மீண்டும் தட்டப்பட்டது; கதவைத் திறந்தபோது அங்கே போலீஸ் அதிகாரிகளும் இன்னும், கோப வெறியுள்ள ஏராளம் மக்களும் வெளியே நின்று கொண்டிருப்பதைக் கண்டான். அவர்கள்

உள்ளே புகுந்து அண்ணனைப் பிடித்து, ஒரு நாயைக் கயிறு கட்டி இழுப்பதுபோல அடி, அடி என்று அடித்து போலீஸ் லாரியில் ஏற்றினார்கள். வழக்குமன்றத்தில் கேஸ் நடந்தது; அண்ணனுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

தூக்கிலே தொங்கப்போகிற கடைசி நேரத்தில் அண்ணன் தூக்குமேடையில் இருந்து கீழே உள்ள ஜனக் கூட்டத்தை நோக்கிப் பார்த்தான். அவனுடைய தலையில் கயிறு மாட்டப்போகிற கடைசி நேரம் வந்தது; அப்பொழுது திடீரென்று தூரத்திலிருந்து மிகுந்த சப்தத்தோடு தம்பி அலறிக் கொண்டு ''அண்ணா, நீங்கள் தூக்கில் தொங்க வேண்டாம்; நான்தானே குற்றவாளி; நியாயப்படி நான் தானே தண்டனையை அனுபவிக்க வேண்டும்; நீங்கள் தண் டனையை அனுபவிக்க வேண்டாம், தூக்கில் தலை கொடுக்க வேண்டாம்" என்று கத்தினான். ஆனால் அண்ணன் அமைதி யாய் தம்பியை நோக்கிப் பார்த்து, ''தம்பி நான் உனக் காக தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்; என்னுடைய பரி சுத்தமான, நீதியின் வஸ்திரத்தை நீ ஒருபோதும் கறை படுத்தாதே" என்று சொல்லி மறுவினாடியில் தன்னுடைய தலையைத் தூக்குக் கயிற்றில் விட்டு தொங்கி ஜீவனை விட்டான்.

தம்பி ஓடிவந்து பிரேதத்தின்மேல் விழுந்து அழுது' ''அண்ணா எனக்காக நீ மரித்தாய்; இனி நான் தூய்மை யான வாழ்க்கை வாழ்வேன்; நீ பின்பற்றின இயேசுவுக்காக வாழ்வேன்'' என்று தன் வாழ்க்கையைக் கர்த்தருக்கென்று அர்ப்பணித்தான்.

தேவபிள்ளையே, சிந்தித்துப்பார்! ஒரு அண்ணனுக்குத் தம்பியின் மேல் அவ்வளவு பாசம் இருந்து தம்பியை நீதி கரிக்கும்படி தன்மேல் அநீதியை ஏற்றுக் கொண்டிருப்பானா னால்; கிறிஸ்து உனக்காக எவ்வளவு அநீதியை ஏற்றுக் கொண்டிருப்பார் என்று தியானித்துப்பார்! அவர் உனக் காக, உன் ஸ்தானத்தில் மரித்தார்.

"நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த நமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.

இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலான அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோ. 5:7-9).

"எல்லோரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; தேவன் பொறுத்துக் கொண்டதைக் குறித்து தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்" (ரோ. 3:23-26).

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை நீதிகரித்தபடியால் நீ ஒரு நீதிமானாய் நடப்பாயா? அவர் உன்னுடைய மூத்த சகோதரனாய் உனக்காக ஜீவனைக் கொடுத்தாரே, அந்த தியாகத்தை நீ ஒருபோதும் மறவாதே.

அந்த இயேசு உனக்காக நீதியின் கிரீடத்தை வைத்திருக்கிறார்! தம்முடைய நீதியை அவர் உனக்குத் தந்திருக்கிறார். தம்முடைய பரிசுத்தத்தினால் உன்னை அலங்கரிக்கிறார், அவருடைய அன்பிற்கும், தியாகத்திற்கும் தகுதியுள்ள ஒரு வாழ்க்கை வாழும்படி இன்று நீ உன்னை அர்ப்பணிப்பாயா?

நீதியின் கிரீடம் உனக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

அத்தியாயம் 4

ஜீவ கிரீடம்!

''கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்'' (யாக் 1:12).

''நீ மரணபரியந்தம் உண்மையாயிரு: அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்'' (வெளி 2:10).

இரண்டு கிரீடங்கள் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. 1. மரண கிரீடம், 2. ஜீவக் கிரீடம். பாவத்தினால் சாவாகிய மரணம் பூமிக்கு வந்தது. கிறிஸ்துவால் நித்திய ஜீவன் நமக்கு உண்டு.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவம்செய்கிற ஆத்துமா சாவே சாகும். அதே நேரத்தில் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கும் போது நித்திய ஜீவன் வருகிறது (யோவான் 6:47). கிறிஸ்துவை அறிகிற அறிவே நித்திய ஜீவனாகும் (யோவான் 17:3).

முள் முடி சூடி ஒருவன் சிலுவைக்கு நேராக நடந்து செல்கிறான் என்றால், சாவு அவனுக்கு எதிர் நோக்கி இருக்கிறது என்று ஜனங்கள் புரிந்து கொள்வார்கள். இயேசு நமக்காக மரணத்தை ருசிப்பார்த்தார்.

மரண தண்டனை இயேசுவுக்கு, ஜீவனாகிய விடுதலை நமக்கு.

தேவபிள்ளையே, உனக்கு ஜீவக் கிரீடத்தை தரும்படிக்கு கிறிஸ்து சாவின் கிரீடத்தை தன் மேல் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். ஆதாமின் மூலம் வந்த மரணத்தின் முதுகெலும்பை உடைப்பதற்கு இயேசு தன்னையே ஒப்புக் கொடுத்து, தன்னுடைய இரத்தத்தையெல்லாம் ஊற்றினார். அவர் சிலுவையில் பட்ட பாடுகளை விசுவாசிக்கும்போது நமக்கு நித்திய ஜீவன் உண்டு.

மரணப் பள்ளத்தாக்கின் வழியாக நடந்த கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினுர் என்று ஏசாயா 53:12-ல் வாசிக்கிருேம். அவருடைய ஆத்துமா கலங்கினது. அவருடைய ஆத்துமா மரணத்திற்கேதுவாக துக்கம் கொண்டிருந்தது. மட்டுமல்ல, அவர் தன்னேயே பிழிந்து; தன்னுடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றிக் கொடுத்தார்.

எல்லா பயங்கரங்களிலும் கொடூரமான ஒரு பயம் உண்டென்ருல் அது மரண பயம் தான்! தூக்குத் தண்டனேக்காக காத்திருக்கும் அநேக கைதிகள் மரண பயத்தினுல், அரசாங்கம் அவனே தூக்கில் போடுவதற்கு முன்பாகவே தாங்களாகவே தற்கொலே செய்து கொள்கிருர்கள். காரணம் மரணபயம் அவ்வளவு கொடூரமானது.

மரணம் ஒரு மனுஷனே அவருடைய மனேவி பிள்ளேகளிடத்திலிருந்தும், சொந்தக்காரர்களிடத்திலிருந்தும் நித்தியமாக பிரித்து விடுகிறது. நித்திய பிரிவையும் வேதனேயையும் அவர்கள் அனுபவிக்கிருர்கள்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் மரித்த ஒவ்வொருவரும் சாத்தானுல் பாதாளத்தில் சிறை வைக்கப்பட்டார்கள். ஆனுல் இயேசு சிலுவையில் மரித்ததின் மூலமாக பாதாளத்தில் இறங்கி சாத்தானுல் சிறைப்பட்டவர்களே மீட்டுக் கொண்டு உன்னதத்திற்கு ஏறினுர். அந்த இயேசுவால் மட்டுமே நித்திய ஜீவன் நமக்கு உண்டு. அந்த இயேசு மரணத்தின் கூரை ஒடித்தார். அந்த இயேசு மரணத்திற்கும், பாதாளத்திற்கும் திறவுகோலாக நின்ருர். ஆகவே மரணத்தின் முதுகெலும்பைத் தட்டி, ''மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?'' என்று வெற்றி சிறக்கிருேம்.

ஒரு முறை வியாதியாக இருந்த ஒருவரைப்பார்க்கும்படி நான் எனது மோட்டார் சைக்கிளில் புறப்பட்டேன். இன்னெரு சகோதரனும் என்னுடன் வருகிறேன் என்று சொல்ல, இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்ருேம்.

கொஞ்ச தூரம் செல்வதற்குள்ளாக என்னுடைய உள்ளுணர்வுகள் ''நீ விபத்தைச் சந்திக்க போகிறாய்!'' என்று உணர்த்திற்று. நான் உடனே பின்னே இருந்த சகோதரனிடம் ''நாம் இன்றைக்கு வியாதியாக இருக்கிறவரைப் பார்க்க போகவேண்டாம். ஏனென்றால் ஒரு விபத்து நேரிடப் போகிறது" என்றேன்.

ஆனால் அவரோ அதை நம்பவில்லை. அதெல்லாம் மனதின் வீண் பிரமை, நாம் புறப்பட்டபடியே போகலாம் என்று வற்புறுத்தினார். ஆகவே வேறு வழியின்றி நான் அவருடன் தொடர்ந்து செல்ல ஆரம்பித்தேன்.

கொஞ்ச நேரத்தில் என் உள்ளுணர்வுகள் மீண்டும் என்னை எச்சரித்தது. ''நீ ஒரு விபத்தை சந்திக்க போகிறாய்" என்று உணர்த்தியது. உடனே நான், கர்த்தரை நோக்கி: ''ஆண்டவரே, வரப்போகிற விபத்து எப்படிப்பட்டதாக இருந்தாலும் என்னைக் காத்துக் கொள்ளும். ஒருவேளை விபத்தில் மரணம் ஏற்படக்கூடியதாக இருந்தால், நான் உம்மண்டை வருவதற்கு ஆயத்தமாக இருக்கிறேன். ஆனால், எனக்கு பின்னால் உட்கார்ந்திருக்கிற சகோதரனுக்கு நீர் காத்து ஜீவனை கொடும். ஏனென்றால் அவர் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. அவர் இப்போது மரித்தால் நரகத்திற்கு சென்றுவிடுவாரே. ஆகவே அவரைக் காத்துக் கொள்ளும்" என்று வேண்டிக்கொண்டேன்.

மூன்றாவது முறையும் என் உணர்வு எச்சரித்தது. அதை தொடர்ந்து என் கண்களில் இருந்த கண்ணாடி தவறி விழுந்தது. அதை எடுத்துக் கொண்டு மீண்டும் என்னுடைய பிரயாணத்தை தொடர்ந்தேன். கொஞ்ச நேரத்தில் ஒரு காரை முந்தி செல்வதற்கு மிக வேகமாக என்னுடைய மோட்டார் சைக்கிளை நடு ரோட்டிற்குத் திருப்பின போது, அது அங்கேயிருந்த ஒரு பெரிய கல்லின் மேல் நேருக்கு நேர் பயங்கரமாக மோதி நொறுங்கி விழுந்தது. நாங்கள் எத்தனையோ அடி தூரம் தூக்கி எறியப்பட்டோம். அந்த விபத்

தில் யாராலும் உயிர் தப்பிக்க முடியாது. அவ்வவவு பயங்கரமான ஒரு விபத்து.

ஆனால் கர்த்தர் கிருபையால் என்னுடைய ஜீவனையும், என்னுடன் பிரயாணம் செய்த சகோதரரின் ஜீவனையும் காத்துக் கொண்டார். எங்களுக்கு எலும்பு முறிவுகூட இல்லை. மரண இருளின் பள்ளத்தாக்கிலே நான் நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன். தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் என்று தாவீது சொல்லுகிறது எத்தனை உண்மையானது என்று அன்றைக்கு புரிந்து கொண்டேன்.

அன்று சரீரத்தை மரணத்திற்கு தப்புவித்தார். அது போலவே ஒரு நாள் என் ஆத்துமாவை பாதாளத்திற்கு தப்புவித்தார். தம்முடைய சிலுவையின் மரணத்தின் மூலமாக, இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலுக்கும், நித்திய அழிவுக்கும் தப்புவித்தார்.

மட்டுமல்ல, நித்திய ஜீவனை நமக்குத் தந்து, பரலோக பாக்கியத்துக்கு பங்குள்ளவர்களாக மாற்றினார். கிறிஸ்துவோடு கூட என்றென்றும் பரலோகத்தில் ஜீவித்திருப்பது எத்தனை பெரிய பாக்கியம்! ஜீவக் கிரீடத்தை தருகிற ஆண்டவர் நமக்காக என்னென்ன காரியங்களையெல்லாம் செய்கிறார் என்று தியானித்துப் பார்ப்போமா?

1. ஜீவ மார்க்கம்:-

தாவீது ஆண்டவரை நோக்கி, "ஆண்டவரே, ஜீவ மார்க்கத்தை எனக்கு தெரியப்படுத்துவீர்" என்று ஜெபித்தான் (சங். 16:11). பூமியிலே ராஜாவாக அரசாண்டு, பொன்னால் செய்த கிரீடத்தை சூடும் கிருபையோடு கூட அவர் நின்று விடவில்லை; ஜீவ மார்க்கத்தின்படி சென்று நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொண்டு, ஜீவக் கிரீடம் சூட்டப்படும் மேன்மையை அவர் வாஞ்சித்துக் கதறினார். அவருடைய உள்ளத்தில் ஜீவ மார்க்கத்தைப் பற்றிய தாகம் இருந்தது.

அப்போஸ்தலனுகிய பவுல் சொல்லுகிருர்: பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்ச மாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க் கத்தை நமக்கு உண்டுபண்ணினுர் (எபி. 10:19).

நாம் ஜீவ மார்க்கத்தின் வழியாய் பிரவேசிக்க இயேசுவி னுடைய மாம்சமாகிய திரை கிழிக்கப்பட வேண்டியதா யிற்று. கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் நமக்கு ஜீவ மார்க் கம் வெளிப்பட்டது! அல்லேலூயா!

சிலுவையில் அவர் அடித்து நொறுக்கப்பட்டார் போர்ச்சேவகன் ஈட்டியால் அவருடைய விலாவில் குத்தின படியால் அங்கேயிருந்து இரத்தமும், தண்ணீரும் புறப் பட்டது. பிளக்கப்பட்ட அந்த விலாவை நோக்கிப் பாருங்கள்; அங்கே நமக்கு ஒரு மார்க்கம் உண்டு. அன் றைக்கு ஆதாமின் விலாவிலிருந்து எடுக்கப்பட்ட ஏவாளுக்கு கணவனேடு இசைந்திருப்பதற்கு ஒரு மார்க்கம் உண்டானது போல, நமக்கு ஜீவனுகிய கிறிஸ்துவோடு கூட மணவாட்டி யாய் இணையும் ஜீவ மார்க்கம் உண்டு.

2. ஜீவ புத்தகம்:-

நாம் ஜீவக் கிரீடம் சூட்டப்பட வேண்டுமானுல், நம் முடைய பெயர்கள் ஜீவ புத்தகத்தில் காணப்பட வேண்டும். வேதம் சொல்கிறது, "ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்த கத்தில் பேர் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவே சிப்பார்கள்" (வெளி. 21:27).

நீ ஒரு வேளை கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கலாம்; ஒரு காலத்தில் இரட்சிப்பின் சந்தோஷத்தை அனுபவித்தவ ஞயிருக்கலாம். ஆனுல் நீ துன்மார்க்கத்திலும், பாவத்திலும் விழுவாய் என்ருல், ஜீவ புத்தகத்தில் இருந்து உன்னுடைய பெயர் கிறுக்கப்பட்டு விடும். நீ பரலோகத்தின் பாக்கி யத்தை இழந்து போகிறவனுக இருப்பாய்! இது எத்தனை வேதனையானது. (சங். 69:28, வெளி. 3:5).

உன்னுடைய பெயர் இன்றைக்கு ஜீவ புத்தகத்தில் காணப்படுகிறதா? இன்றைக்கு நான் மரித்தாலும் கிறிஸ்துவோடுகூட இருப்பேன் என்ற விசுவாசம் உனக்கு உண்டா? சிந்தித்துப்பார் தேவபிள்ளையே! அந்த நம்பிக்கை உனக்கு இல்லாவிட்டால் ஜீவ கிரீடத்தை உன்னல் சூடிக் கொள்ள முடியாது. ஆகவே இன்றைக்கே உன்னுடைய பாவத்தை அறிக்கை செய்து கர்த்தரண்டைக்கு திரும்புவாயாக. அவரிடத்தில் இரக்கம் உண்டு. மனம் திருந்தி உன்னுடைய ஒவ்வொரு பாவங்களையும் கா த்தரிடத்தில் அறிக்கையிடு. அவர் நிச்சயமாகவே உனக்கு மனம் இரங்குவார்.

3. ஜீவ தண்ணீர்:-

நம்முடைய தேவனுகிய கர்த்தர் தாமே, ''ஜீவனின் ஊற்றாய்" இருக்கிறார். அவரிடத்திலிருந்து ஜீவத்தண்ணீர் நம்மை நோக்கி கடந்து வருகிறது. அந்த ஜீவ நதி நம்மை நிரப்புகிறது. அந்த ஜீவத்தண்ணீர் நம்முடைய தாகத்தைத் தீர்க்கிறது.

சிங்காசனத்தின் மத்தியில் இருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டையில் நடத்துவார். தாகமாய் இருக்கிறவனுக்கு நான் ஜீவத் தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். தாகமாய் இருக்கிறவன் வரக்கடவன். விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாக வாங்கிக் கொள்ளக்கடவன் (வெளி 7:17, 22:17).

தேவபிள்ளையே, இந்த ஜீவ நதியாகிய நீரூற்று பரிசுத்த ஆவியானவர் தான்! அவர் உன்னை நிரப்பி, ஜீவக்கிரீடத்தை நீ பெற்றுக் கொள்ளும்படி உன்னைத் தகுதியாக்குவார்.

4. ஜீவவசனம்:-

ஜீவக்கிரீடத்தை சுதந்தரித்துக் கொள்ளப்போகிறவர்களுக்காக, கர்த்தர் ஜீவவசனத்தை வைத்திருக்கிறார். வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு வசனங்களும் ஆவியாகவும் ஜீவனுகவும் இருக்கிறது. பரிசுத்த ஆவியின் வல்லமை இந்த

வசனங்களோடு இணைந்து இருக்கிறபடியினால், இந்த ஜீவ வசனங்கள் நம்முடைய ஆத்துமாவை உயிர்ப்பிக்கின்றன. அன்றைக்கு பேதுரு, கிறிஸ்துவிடம் தன்னை தாழ்த்தி "யாரிடத்தில் போவோம் ஆண்டவரே? நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே!" என்று சொன்னான் (யோ 6:28).

இந்த ஜீவ வசனங்கள் நம்முடைய கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. ஆகவே ஜீவ வசனங்களின் வல்லமையை நம்முடைய வாழ்க்கையின் அனுபவமாக்கி கொள்வோமாக. ஜீவ வசனங்களின்படி நாம் நடந்தால் மாத்திரம்தான், ஜீவக்கிரீடத்தை சூட முடியும். வசனமே நமக்கு வழிகாட்டி. வசனமே நமக்கு சட்டத்திட்டங்கள்.

"ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டப்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்" (II தீமோ 2:5). என்று வேதம் எச்சரிக்கிறது.

நாம் ஜீவக்கிரீடத்தால் முடிசூட்டப்படுவதற்கு, சட்டத்திட்டமாகிய ஜீவவசனங்களே நமக்கு வழிகாட்டி.

5. ஜீவவிருட்சம்:-

ஜீவக்கிரீடத்தைச் சூட்டும் கர்த்தர், அதோடுகூட எத்தனை அருமையான மேன்மையான காரியங்களை நமக்குச் செய்கிறார் என்பதை தியானித்துப் பாருங்கள். ஜெயம் கொள்ளுகிறவனுக்கு ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்று அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார் (வெளி 2:7).

ஆதியிலே அந்த ஜீவவிருட்சம் ஏதேன் தோட்டத்திலே இருந்தது. மனுஷன் பாவம் செய்தபோது கர்த்தர் அவனை தோட்டத்தில் இருந்து விரட்டினார். மட்டுமல்லாமல், இந்த ஜீவவிருட்சத்தை மூன்றாம் வானமாகிய பரதீசுக்குக் கொண்டுபோய் விட்டார் (எபி 2:7, ஆதி 2:9).

அருமையான தேவனுடைய பிள்ளையே, நீ ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து என்றென்றைக்கும் தேவ

சமுகத்தில் நிலேத்திருக்கும்படிக்கு, உன்னுடைய பாவங் களறக் கழுவப்படுவாயா?

தேவபிள்ளேயே, இத்தனே ஆசிர்வாதங்களும் நீ கிறிஸ்துவண்டை வரும்போது உனக்கு கிடைக்கிறது. அவர் ஜீவக்கிரீடத்தால் உன்னே முடிசூட்டுகிறது மாத்திர மல்ல, இத்தனே ஆசிர்வாதங்களேயும் கிருபையாய் உனக்கு தந்தருளுவார். இந்த அருமையான தேவனே நீ நன்றியோடு ஸ்தோத்தரிப்பாயா? அவருடைய பாதங்களேப் பற்றி பணிந்துக் கொள்வாயா? கர்த்தர் உன்னே ஆசிர்வதிப் பாராக!

மகிமையுள்ள வாடாத கிரீடம்!

''பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்'' (I பேதுரு 5:4).

கிறிஸ்து நம்மை மகிமையான கிரீடத்தினுல் முடி சூட்ட விரும்புகிறுர். உலகத்திலுள்ள கிரீடங்களெல்லாம் அழிந்து போகக் கூடியது; காலப்போக்கில் எடுபட்டுவிடக் கூடியது.

பிரசித்தி பெற்ற ராஜாவாகிய ரிச்சர்ட் யுத்தத்தில் தோல்வியடைந்த போது, அவன் எதிரியால் சிறைபிடிக்கப் பட்டான். பகைவனுடைய ராஜ்யத்திற்குக் கொண்டு செல் லப்பட்டான். அவனை எல்லோரும் ஏளனமும், பரியாசமும் செய்தார்கள். திரளான ஜனங்களுக்கு முன்பாக அவன் ஒரு பரியாசப் பொருளாய் மாறினுன்.

கடைசியாக ஒரு பெரிய விழா ஒன்றை ஜெயங் கொண்ட ராஜா ஒழுங்கு செய்தான். தோல்வியடைந்த ரிச்சர்ட் ராஜா தன்னுடைய கிரீடத்தை எடுத்து எல்லோருக்கும் முன்பாக நடந்து போய் ஜெயங்கொண்ட ராஜாவுக்கு சூட்ட வேண்டியதிருந்தது. ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள்! தோல்வியடைந்த ராஜாவினுடைய உள்ளத்தில் அது எவ் வளவு வேதனையாய் இருந்திருக்கும்! அவனுடைய உள்ளம் எவ்வளவு புண்பட்டிருக்கும்! தன்னுடைய மகிமையான கிரீடத்தை தன்னுடைய சொந்தக் கைகளினுலே ஒரு விரோ திக்குச் சூடினுல், இது எத்தனை பெரிய தலைகுனிவு! இப்படித் தான் அநேகருடைய கிரீடங்கள் கைகளை விட்டுக் கடந்து போகிறது. அவை அனைத்தும் வாடக்கூடிய கிரீடங்கள்; அழியக் கூடிய கிரீடங்கள்!

சிலருக்குச் செல்வம் ஒரு கிரீடமாக விளங்குகிறது. ஆனுல் கால சூழற்சியில் அவருடைய செல்வங்களெல்லாம்

ஓடி மறைந்து தரித்திரனாய், எளியவர்களாய் தடுமாறு கிறார்கள், அவர்களுடைய பிள்ளைகள் அப்பத்திற்கு இரந்து திரிகிறார்கள்.

சரீர பாடுகளைவிட மிக வேதனையான ஒன்று உண்டு என்றால் அது ஏளனத்தாலும், பரியாசத்தாலும் வரும் ஆத்தும பாடுகள்தான்! கேலியையும், பரியாசத்தையும் இருதயம் தாங்கிக் கொள்ளுவதில்லை. ''தீயினால் சுட்டப்புண் உள் ஆறும்; ஆறாதே நாவினால் சுட்ட வடு" என்று திருவள்ளுவர் எழுதுகிறார். சொற்கள் இருதயத்தில் ஆழமான காயத்தை உண்டாக்குகிறது; திடீரென்று வரும் ஏழ்மை உள்ளத்தை வேதனைப்படுத்துகிறது.

நமக்கு முன்பாக இரண்டு கிரீடங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. ஒன்று ஏளனத்தின் பரியாசக் கிரீடம்; மற்றது மகிமையான வாடாத கிரீடம்.

இயேசு மகிழ்ச்சியோடுகூட ஏளன பரியாசக் கிரீடத்தை தன்மேல் எடுத்துக் கொண்டு, நம்மைத் தம்முடைய மகிமையான வாடாத கிரீடத்தினால் முடிசூட்டுகிறார்.

கிறிஸ்துவினுடைய தலையில் முள் முடி சூட்டின போது அவரை எவ்வளவு பரியாசம் செய்தார்கள்; அவருடைய சிரசின் மேல் யூதருக்கு ராஜா என்று மேல் விலாசத்தை எழுதிப் போட்டார்கள்; நீ யூதருக்கு ராஜாவானால் கீழே இறங்கி வா என்றார்கள்; மற்றவர்களை இரட்சித்தவன் தன்னைத்தான் இரட்சிக்கத் திராணி இல்லை என்றார்கள்.

கிறிஸ்துவினுடைய பிறப்பிலிருந்து மரணம் வரையிலும் அவருக்குக் கிடைத்ததெல்லாம் நிந்தையும், அவமானமும் கேலியும், பரியாசமும்தான்!

ஒருவேளை மரியாளின் வயிற்றில் அதுவும் கன்னியின் வயிற்றில் பிறந்த போது அவருடைய உறவினர் எல்லாம் கூட அவரை கேலி செய்திருக்கக் கூடும்.

யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே? என்று கேட்டுக் கொண்டு சாஸ்திரிகள் வந்ததின் நிமித்தம் ஏரோது ராஜா அவரை கொலே செய்ய வகை தேடினுன். ஆகவே மரியாளும், யோசேப்பும் அவரைத் தூக்கிக் கொண்டு எகிப்து தேசத்திற்கு ஓடினுர்கள். பிற்பாடு அவர் ஒளிந்து நாசரேத் என்ற ஊரில் வாழ வேண்டியதாயிற்று.

அங்கே அவர் தீர்க்கதரிசியாகவும், சுவிசேஷகராகவும் அற்புதங்களைச் செய்கிறவராகவும், வல்லமையாய் பிரகாசித்தாலுங் கூட, அங்குள்ள ஜனங்கள் அவரை அற்பமாகவே எண்ணினுர்கள். இவன் ஒரு தச்சன் அல்லவா என்று சொன்னுர்கள்; பரிசேயர்கள் அவரைப் பிசாசு பிடித்தவன் என்ருர்கள், பெயல்சபூலீனுல் பிசாசுகளைத் துரத்துகிருன் என்று மிகவும் தரக்குறைவாய்ப் பேசினுர்கள்; ஆயக்காரருக்கும், பாவிகளுக்கும் நண்பன்; பாவிகளோடு கூட பந்தியிருக்கிறவன்; போஜனப்பிரியன் என்றெல்லாம் அவரை ஏளனம் செய்தார்கள்.

மட்டுமல்ல, அவர் சிலுவையிலே ஒரு ஏளனச் சின்னமாய் மாறினுர். எல்லா ஜனங்களுக்கும் முன்பாக நிந்தையையும், பரியாசத்தையும் அவர் சுமந்து பரியாசத்தின் ராஜாவாக முள்முடி சூட்டப்பட்டுத்தாங்க முடியாத வேதனையைச் சகித்தார்.

தேவபிள்ளையே, நீ அனுபவிக்கிற ஒவ்வொரு ஏளனங்களையும், பரியாசங்களையும் அவர் அறிந்திருக்கிருர். அவர் உன்னைப் போலவே வேதனைகளை அனுபவித்து உனக்கு முன்பாக கடந்து சென்றவரல்லவா? நிச்சயமாகவே மனதிரங்கி உன்னை அரவணைத்து உனக்கு தம்முடைய வாடாத மகிமையின் கிரீடத்தைச் சூட்டுவார்.

உலகத்தார் நிந்தைகளையும், அவமானங்களையும் சகிக்க முடியாமல் தடுமாறுகிருர்கள். என்னேடு கூட படித்த ஒரு அருமையான நண்பன் அரசாங்கத்தில் உயர் பதவியில் இருந்தார். அவருக்கு மிகுந்த அதிகாரமும், செல்வாக்கும்

இருந்தது. ஆனால் அவர் மேல் பொறாமை கொண்ட சிலர் அவரை வேறு ஒரு இடத்திற்குப் பதவி உயர்வு என்ற பெயரில் மாற்றி அவரது உரிமைகளையெல்லாம் பறித்துவிட்டார்கள். அங்கே அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை; செல்வாக்கும் இல்லை. எல்லோருக்கும் முன்பாக தாழ்த்தப்பட்டு அவமதிக்கப்பட்டதாக அவர் எண்ணினார். அந்தவேதனை அவரது இருதயத்தைப் பிளந்தது. துக்கத்தோடுகூட வீடுதிரும்பினார். உள்ளம் உடைந்து, இருதய நோயினால் தாக்குண்டு உடனே மரித்தார். இளம் வயதுள்ளவர்தான் அவர். அவருடைய மனைவி பெரிய டாக்டராய் இருக்கிறார்கள். ஆனாலும், அவமானத்தை அவருடைய இருதயத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை,

தேவபிள்ளையே, நாம் துக்கத்தை ஒருபோதும் நமக்குள் அடக்கி வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. கிறிஸ்துவின் பாதங்கள் நமக்கு ஆறுதலும், அடைக்கலமுமாய் இருக்கிறது. நாம் நடந்துபோகிற பாதையை அவர் அறிவார். நிந்தையும், அவமானங்களும் நம்மைச் சூழ்ந்து இருக்கிறதை அவர் அறிகிறார். மனதிரங்கி நம்மை விடுவித்து உயர்த்தி நம்மை ஆசீர்வதிக்கிறார் மட்டுமல்ல நம்மை பாக்கியவான்களாக மாற்றி ஜீவக் கிரீடத்தைச் சூட்டுகிறார். இயேசு சொன்னார்: "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத் 5:11,12).

நிந்தையும், பரியாசமும் உன்னைச் சூழ்ந்து கொள்ளும் போது கிறிஸ்துவை நினைத்துக்கொள். நீ சென்ற பாதையில் அவரும் சென்றாரே; அவருடைய கரங்கள் நிச்சயமாகவே உன்னை ஆறுதல்படுத்தும், தேறுதல்படுத்தும்.

நிந்தையும், பரியாசமும் உன்னைச் சூழ்ந்து கொள்ளும் போது, கிறிஸ்து உனக்காக வாக்களித்த மகிமையான

வாடாத கிரீடத்தை நினைத்துக் கொள். நீ முடிசூட்டப்படுகிற நாள் எத்தனை மகிமையாய் இருக்கும்! இக்காலத்தின் நிந்தைகளும், அவமானங்களும் இனி உங்களில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பானவைகள் அல்லவே?

நிந்தைகளும், பரியாசங்களும் உன்னைச் சூழ்ந்து கொள்ளும்போது யோபு பக்தனை நினைத்துக் கொள். நிந்தைகளையும், பரியாசத்தையும் அனுபவித்த யோபு சொல்லுகிறார்: ''நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" (யோபு 28:10). அப்படியே யோபு இரட்டத்தனையாய் ஆசீர்வதிக்கப்பட்டான். நிந்தைகளின் மத்தியில் கர்த்தர் அவனை உயர்த்தி மேன்மைப்படுத்தி ஆசீர்வதித்தார். மட்டுமல்ல, நீதிமொழிகள் 17:6 சொல்லுகிறது: ''பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்கு கிரீடம்; பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே" யோபுவைக் குறித்தும் வேதம் சொல்லுகிறது. ''அவன் நான்கு தலைமுறையாக தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான்" (யோபு 42:16).

நிந்தைகளும், பரியாசங்களும் உன்னைச் சூழ்ந்து கொள்ளும்போது மோசேயை நினைத்துக் கொள். வேதம் சொல்லுகிறது: ''மோசே எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமாக எண்ணினன்; அநீதியான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களுடனேகூட துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான்'' (எபி. 11:25,26). மோசேயைக் கர்த்தர் உயர்த்தினர். அவனைப் பரியாசம் பண்ணி, கேலிசெய்த பார்வோனுக்கு முன்பாக மோசே அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தார். கர்த்தர் மோசேயை மிகவும் உயர்த்தினர். மோசே பார்வோனுக்கு தேவன் என்று அழைக்கப்பட்டார்.

மற்றவர்களது ஏளனமும், பரியாசமும் உனக்கு மகிமையான வாடாத கிரீடத்தைப் பெற்றுத் தருகிற பாதையிலே

நடத்துகிறது. ஆகவே மனம் கலங்காதே, மனம் சோர்ந்து போகாதே

ஒருநாள் இந்தப் பூமியின் பாடுகள், கஷ்டங்கள், ஏளனங்கள், பரியாசங்கள் எல்லாவற்றையும் தாண்டி நாம் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்திற்குள் கடந்து செல்லுவோம். அங்கே நமக்காக எத்தனை ஆனந்தமான வரவேற்பு வைக்கப் பட்டிருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள்! தேவ தூதர் கள் நம்மை வரவேற்பார்கள்; முழு பரலோகமும் நம்மை ஆனந்தக் களிப்போடுகூட வரவேற்கும். அந்த ஒளிமயமான தேசத்தில் நம் அருமை இயேசு கிறிஸ்துவால் முடிசூட்டப் படுவோம். அந்த வாடாத மகிமையின் கிரீடம் எவ்வளவு அருமையாய், அழகாய் இருக்கும் என்று சிந்தித்துப் பாருங் கள்; கர்த்தர் அதை எவ்வளவு அலங்காரமான முடியாக உருவாக்கியிருப்பார்? அந்தக் கிரீடத்தால் நம்மை அவர் முடிசூட்டும் அந்த நாள் எத்தனை ஒரு மகிமையான நாள்!

டி. எல். மூடி என்ற பக்தன் தன்னுடைய பூமியின் ஓட்டத்தில் ஓடி முடிக்கும் போது மிகுந்த மகிழ்ச்சியோடு, இது நான் முடிசூட்டப்படுகிற நாள்; என் ஆண்டவர் என்னை முடிசூட்டுவார்'' என்று கூறி நித்தியத்திற்குள் கடந்து சென்றார்.

பரலோக ராஜ்யத்தில் உன்னை யாரும் கேலியோ, பரியாசமோ செய்யவே முடியாது. அது உன்னுடைய நித்திய வாசஸ்தலம். பரலோகத்தில் நாம் நித்திய, நித்தியமாய் செலவழிக்கிற காலங்களைச் சிந்தித்துப் பார்க்கும்போது அதோடுகூட இந்தப் பூமியின் வாழ்க்கை ஒப்பிடக் கூடிய தல்ல- இந்த வாழ்க்கை சில வினாடி நேரங்களைப் போல ஓடி மறைந்துவிடும்.

அன்றைக்கு லாசரு, ஐசுவரியவான் வீட்டில் தரித்திர னாய், பிச்சைக்காரனைப் போல இருந்தான். மேஜையிலி ருந்து விழும் சிறு அப்பத்துணுக்குகளினால் தன்னுடைய பசியைத் தீர்த்துக் கொள்ள விரும்பினான். அவன் எத்தனை

பரியாசங்களையும், வேதனைகளையும் அனுபவித்தான்! ஆனாலும், அவனுடைய மரணத்தில் அவனை வரவேற்க பரலோக தேவ தூதர்கள் வந்திருந்தார்கள். அவனை இனிமையாக சுமந்து பரலோகத்திற்குக் கொண்டு சென்றார்கள். மட்டுமல்ல, அவன் ஆபிரகாம் மடியிலே தேற்றப்பட்டான். எவ்வளவுக்கு எவ்வளவு பூமியிலே நிந்தைகளையும், அவமானங்களையும் அடைகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு ஆறுதலையும், தேறுதலையும் நாம் பரலோகத்தில் பெற்றுக் கொள்ளுவோம்.

வேதம் சொல்லுகிறது: "ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்" (வெளி. 7:17).

வாடாத மகிமையின் கிரீடம் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது! நாம் கர்த்தரால் முடிசூட்டப்படுவோம். அல்லேலூயா!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம் 6

அழிவில்லாத கிரீடம்!

"பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றி லேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும் படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்" (I கொரி 9:25).

நமக்கு முன்பாக இரண்டு கிரீடங்கள் வைக்கப்படிருக் கிறது. ஒன்று அழிவுள்ள கிரீடம்; மற்றது அழிவில்லாத கிரீடம்.

பூமியில் நாம் சம்பாதிக்கக்கூடியவைகளில் அழிவுள்ள வைகளும் உண்டு; அழியாமை உள்ளவைகளும் உண்டு. நம் முடைய சுகம், பெலன், செல்வமெல்லாம் அழியும். ஆனால் இரட்சிப்பு, நித்திய ஜீவன், பரிசுத்த ஆவி என்றென்றைக்கும் அழிவதில்லை.

ஒரு முறை நான் இந்தோனேஷியாவிற்கு ஊழியத்திற் குச் சென்றிருந்த போது அங்கேயுள்ள பணத்தின் நிலைமை எனக்கு ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் இருந்தது. விலைவாசியும் மிகவும் ஏறிப்போயிருந்தது. இந்தியாவில் ஒரு சர்ட் துணி எடுப்பதற்கு எழுபது ரூபாய் செலவாகிறதானால் அங்கே ஏறக்குறைய ஆறாயிரம் ரூபாய் செலவாகும். அங்கு ஒரு காப்பி குடிக்க வேண்டுமானால் நூற்றைம்பது ரூபாய்; ஒரு நேரம் சாப்பிட வேண்டுமானால் இரண்டாயிரம் ரூபாய். பணமானது தன்னுடைய மதிப்பை இழந்து போனது.

காரணம், அங்குள்ள அரசாங்கம் பலமுறை அந்தத் தேசத்திலுள்ள ஆயிரம் ருபாய் நோட்டுகளையும், நூறு ரூபாய் நோட்டுகளையும் செல்லாது என்று அறிவித்து விட் டது, இரவும், பகலும் கஷ்டப்பட்டு, பாடுபட்டு பணம்

சேர்த்து வைத்து ரூபாய் நோட்டுகள் வைத்திருந்தவர்களெல்லாம் ஒரே நிமிடத்திலே பணத்தின் மதிப்பை இழந்து தரித்திரரானுர்கள். மதிப்போடு காணப்பட்ட பழைய ரூபாய் நோட்டுகளெல்லாம் வெறும் பேப்பர்களாக வீதியிலே கிழிக்கப்பட்டுக் கிடந்தன. ஆம், பணமும், செல்வமும் அழிந்து போகக்கூடியது.

இயேசு சொன்னுர்: ''பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை'' (மத் 6:19, 20).

தேவபிள்ளையே, நீ உன்னுடைய பொக்கிஷங்களை எங்கே சேர்த்து வைத்திருக்கிருய்? நீ சேர்த்து வைத்திருக்கிற உன்னுடைய சுதந்திரங்கள் அழிவுள்ளவைகளா? அல்லது அழியாதவைகளா? என்பதை ஆராய்ந்து பார்!

ஒரு பக்தன் இவ்விதமாய் பாடுகிருன்.

''கண் காண்பதெல்லாம் அழியும், அழியும்,
காணுததல்லோ நித்தியம்,
இயேசு ராஜா வருவார், இன்னும் கொஞ்சம்
காலம்தான் மோட்சலோகம் சேர்ந்திடுவோம்".

வால்டர் என்ற ஒரு நாத்திக வாதி மரிக்கும் போது, டாக்டரைப் பார்த்து, ''ஐயா மரிப்பதற்கு எனக்கு மிகவும் பயமாய் இருக்கிறது; என் ஆஸ்தியில் உங்களுக்குப் பாதியை தருகிறேன்; கொஞ்ச நாட்களாவது நான் உயிரோடு இருக்க வழி செய்யுங்கள்'' என்று கெஞ்சினுன். மரண பயம் அவனை அடித்து உலுக்கிற்று. ஆனுல் டாக்டரோ உதவி செய்ய முடியாமல் தன்னுடைய கைகளை விரித்தார். நாத்திக கொள்கைகளைப் பேசின அவன் தன் மரணத்தில் அவனுடைய மூளை சுதந்தரித்தது என்ன? அவன் மூளை அறிவு

சம்பாதித்தது என்ன? அமைதியில்லாமல் பயத்தோடும், நடுக்கத்தோடும் மரித்தான். மரணத்திற்குப் பிறகு நிச்சயமாகவே அவன் நித்திய அழிவாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலுக்குச் சென்றிருப்பான். எத்தனை பயங்கரம்!

உலகத்தின் மேன்மைகளைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி, பணத்தைச் சம்பாதிக்கும்படி, பெரிய வீட்டைக்கட்டி உல்லாசமாய் ஜீவித்து இருக்கும்படி மனுஷன் தன்னுடைய நேரம், காலம் எல்லாவற்றையும் செலவழிக்கிறான். பைத்தியக்காரனைப் போல அதற்காக இரவும், பகலும் பாடுபடுகிறான். ஆனால் முடிவில் அவை ஒன்றும் அவனோடு கூட செல்லுவதில்லை.

வேதத்தில் கிறிஸ்து ஒரு ஐசுவரியவானைச் சுட்டிக் காண்பித்தார். அவனுக்கு நிலங்களெல்லாம் அதிகமாய் இருந்தது; களஞ்சியங்களெல்லாம் நிரம்பியிருந்தது. அவன் தன் ஆத்துமாவைப் பார்த்து "ஆத்துமாவே; நீ புசித்துக் குடித்து சந்தோஷமாய் இரு" என்று சொன்னான். ஆனால் கர்த்தர் அவனைப் பார்த்து "மதிகேடனே" என்று அழைத்தார். "இன்று நீ மரித்தால் நீ சேகரித்து வைத்திருக்கிறவைகளெல்லாம் யாருடையதாகும்?" என்று கேட்டார். ஆம், அவைகளெல்லாம் அழிந்து போகக்கூடியது.

தேவபிள்ளையே, அழிந்து போகிறவைகளில் உன்னுடைய கண்களை வைக்காதே. அழிந்து போகாத நித்தியமான கிரீடத்தை நோக்கி வாஞ்சித்து கதறுவாயாக!

இயேசு மார்த்தாளைப் பார்த்து அன்றைக்குச் சொன்னார்: "மார்த்தாளே, மார்த்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்" என்றார் (லூக் 10:41, 42).

அன்று நோவாவின் நாட்களில் ஜீவித்த ஜனங்கள், அழிவுள்ள காரியங்களையே தேடினார்களே தவிர, அழிவிலிருந்துப் பாதுகாக்கக்கூடிய பேழையை அவர்கள் எண்ணிக்கூட

பார்க்கவில்லை. உலக சந்தோஷங்களே நித்தியமானது என்று எண்ணி பெண் கொண்டும், பெண் கொடுத்தும் உலக இச்சைகளில் மூழ்கிக் கிடந்தார்கள். ஒரு நாள் ஜலப்பிரளயம் வந்தது; நோவாவின் குடும்பத்தாரைத் தவிர மற்ற எல்லோரும் தண்ணீரில் தத்தளித்து மரித்தார்கள்.

தேவபிள்ளையே, உலகம் அழிவை நோக்கித் தீவிரிக்கிறது. பேதுரு சொல்லுகிறார்: "பூமியும், அதன் கிரியைகளும் அழிந்துபோம்; வானங்கள் வெந்து அழிந்துபோம்" (II பேதுரு 3:10,12). "இச்சைகளை விரும்புகிறவர்கள் அழிந்து போவார்கள்" (I தீமோ 6:9).

ஆனால் நாமோ அந்த அழிவின் நேரத்தில், அழியாமையைச் சுதந்தரித்துக்கொள்ளுவோம். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார், "கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பெலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பெலமுள்ளதாய் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்" ஆம், அழியாத கிரீடம் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

இயேசுவின் வாழ்க்கையை நோக்கிப் பாருங்கள். அவர் அழிவுள்ள பூமிக்குரியவைகளைத் தேடாமல், அழியாத நித்தியமானவைகளையே தெரிந்து கொண்டார். அவருடைய கண்கள் பூமிக்குரியவைகளைத் தேடாமல் நித்தியமானவைகளையே நாடிக்கொண்டிருந்தது. பூமியில் அவர் அந்நியனாயும் பரதேசியாயும் நடந்து சென்றார். அவருக்கென்று இந்த பூமியில் சந்தோஷமாய் ஒன்றும் இல்லை. இரவல் கர்ப்பம், இரவல் கழுதை, இரவல் கல்லறை இவைகள்தான் அவருடைய வழிமுறைகளாக இருந்தது

தேவபிள்ளையே, நீயும் இந்த உலகத்திற்கு அந்நியனும், பரதேசியுமாக கடந்து செல்லுவாய் என்றால் இந்த உலகத்தின் ஆசா பாசங்கள் உன்னைப் பற்றிக் கொள்ளுவதில்லை நீ அழியாமையைச் சுதந்தரித்துக்கொள்வாய்.

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்: "அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்

கிறார்கள்; நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.

"ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்; மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்று எழுதுகிறார். ஆம், தேவபிள்ளையே, அழியாத ஜீவக் கிரீடத்தைப் பெறும்படிக்கு எந்தத் தியாகத்தையும் செய்ய நாம் ஆயத்தமாய் இருப்போமா?

கர்த்தர் சீக்கிரமாய் வருகிறார்; அவர் வரும்போது அவருடைய கரங்கள் நம்மை முடிசூட்டட்டும். கர்த்தர் சொல்கிறார், "இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" (வெளி 22:12).

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிரீடங்களோடு கூட...!

''தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" (I கொரி 2:10).

கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசத்திற்காக ஒரு ஏழை விசுவாசி பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கே அவரை நிமிர்ந்து பார்க்க முடியாதபடி குனிய வைத்தே கட்டையால் முதுகில் அடி, அடி என்று அடித்தார்கள்; எழுந்திருக்க முடியாதபடி பல ஆண்டுகள் ஒரு சிறிய கூண்டுக்குள்ளே அடைத்து வைத்தார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் முதுகெல்லாம் வீங்கி வளைந்து, நெளிந்து போய் இருந்தது. மட்டுமல்ல, அவர் நிரந்தரமாகக் கூனனாகிவிட்டார். முதுகு ஒட்டகத்தின் முதுகைப்போல அருவருப்பாய் காணப்பட்டது.

அவர் விடுதலையாகி வெளியே வந்த பிறகு எல்லோரும் அவரைப் பார்த்து, ''ஒட்டகக் கூனன்'' என்று கேலி செய்தார்கள்; சிறு பிள்ளைகள் அவரை ''ஒட்டகத் தாத்தா'' என்று அழைத்தார்கள். அது அவருடைய இருதயத்தை மிகவும் புண்படுத்தினது. என்றாலும் கர்த்தருக்காக அதையும் சகித்துக் கொண்டார்.

ஒரு நாள் மனம் சோர்ந்து போய் அவர் தெருவிலே நடந்து வந்த போது ஒரு சிறுமி அவரைப் பார்த்து, ''அங்கிள், அங்கிள் உங்களுடைய முதுகிலே ஒரு பெட்டியை வைத்திருக்கிறீர்களே, அதில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டாள். அந்தச் சிறுமியும் தன்னைப் பரியாசம் பண்ணுகிருள் என்று அவர் எண்ணினாலும் சாந்தமாக, ''அதில்

ஒன்றுமே இல்லை; என்னுடைய முதுகுதான் அப்படி வளைந்து இருக்கிறது" என்று பதில் சொன்னார். அவருடைய கண்களிலே கண்ணீர் வடிந்ததைப் பார்த்தவுடன் அந்தச் சிறுமி ''அங்கிள், நீங்கள் கண்ணீர் விடாதீர்கள்; நான் உங்களைக் கேலி செய்யவில்லை; நான் அதைப் பார்த்த போது வளைந்திருக்கிற உங்கள் முதுகில் கர்த்தருடைய ரகசிய பெட்டி இருப்பதைப் போல உணர்ந்தேன்'' அதற்குள்ளே என்னதெல்லாம் இருக்கிறது என்று நான் சொல்லட்டுமா? நீங்கள் கர்த்தருடைய வருகையில் பறந்து செல்லுவதற்கான தேவதூதர்களின் செட்டைகள் இருக்கிறது; அதற்குள்ளே உங்களுக்குரிய கிரீடங்கள் இருக்கிறது; பரலோகத்தின் உச்சிதங்கள் இருக்கிறது; கர்த்தருடைய கிருபைகள் இருக்கிறது'' என்றெல்லாம் அவள் அடுக்கிக் கொண்டே போனாள்.

சிறு பிள்ளை அவ்வளவு ஞானமாகப் பதில் சொன்னதைப் பார்த்தவுடன் அவருக்குச் சந்தோஷமும், உற்சாகமும் உண்டானது. அந்தச் சிறு பெண் சொன்னதில் பெரிய வெளிப்பாடு இருக்கிறதை உணர்ந்தார். தன்னுடைய முதுகில் இருக்கிறது பெலவீனத்தின் அறிகுறியல்ல; கர்த்தருடைய ஆசீர்வாதத்தின் அறிகுறி என்பதை உணர்ந்து கர்த்தரை ஸ்தோத்தரித்தார், ஆவியில் பெலன் கொண்டார்!

நம்மை முடிசூட்டும் கர்த்தர் நமக்காக கிரீடங்களை மாத்திரமல்ல, இன்னும் மகிமையான காரியங்களையும் அவர் வைத்திருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் அதைச் சொல்லும் போது, ''தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை நமக்கோ தன்னுடைய ஆவியினால் வெளிப்படுத்தினார்'' என்று குறிப்பிடுகிறார் (I கொரி 2:10). நமக்காக அவர் ஆயத்தப்படுத்தியது என்ன? என்பதை நாம் சற்று தியானித்துப் பார்ப்போமா?

1. **ராஜ்யம்:-** கர்த்தர் நமக்காக ஆயத்தப்படுத்தினவைகளிலே, மிகவும் முக்கியமானது கர்த்தருடைய ராஜ்யம், அந்த ராஜ்யம் நமக்காக ஆயத்தப்படுத்தப்பட்டு இருக்கிறது.

கர்த்தருடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கும் அந்த நாட்களிலே நம்முடைய அருமையான கிறிஸ்து இரட்சகர் ராஜாதி ராஜாவாய் நின்று, நம்மைப் பார்த்து, ''வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே; உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லுவார் (மத் 25:34). ஆம், அது நம்முடைய ராஜ்யம்; பரிசுத்தவான்களுடைய ராஜ்யம்; நம்முடைய அருமை இரட்சகருடைய ராஜ்யம். அந்த ராஜ்யத்திற்குள் நாம் பிரவேசிக்கும் போது, நமக்கு எவ்வளவு அருமையான வரவேற்பைத் தேவ தூதர்கள் தருவார்கள்! நாம் கிறிஸ்துவோடுகூட சிங்காசனத்தில் வீற்றிருந்து அவரோடு கூட ஆளுகை செய்வோம்! அல்லேலூயா!

ஒரு முறை ஆப்பிரிக்கா நாடுகளில் தியாகமாய் ஊழியம் செய்து விட்டு தன்னுடைய சொந்த தேசமாகிய அமெரிக்காவிற்கு ஒரு மிஷனெரி திரும்பிச் சென்றார். கப்பலில் அமெரிக்கா ஜனாதிபதியும் பிரயாணஞ் செய்தார். கப்பல் அமெரிக்காவைச் சேர்ந்தது. ஜனாதிபதிக்கு உற்சாகமான வரவேற்பு; அலங்கரிக்கப்பட்ட கார்கள், அரசியல் பிரமுகர்கள், வானவேடிக்கைகள் எல்லாவற்றோடு கூட அவர் கெம்பீரமாக இறங்கினார். அதே நேரத்தில் அந்த மிஷனெரியை வரவேற்பதற்கு யாரையும் காணோம். அவருடைய உள்ளம் வேதனைப்பட்டது. நான் ஆண்டவருக்காக தியாகமாக இரவும் பகலும் உழைத்து விட்டு வந்தேன்; எனக்கு எந்த வரவேற்பும் இல்லை என்று அவர் அங்கலாய்த்தார்.

அப்போது கர்த்தர் மெல்லிய சத்தத்துடன், அந்த மிஷனெரியோடுகூட பேசினார், ''மகனே நீ கவலைப்படாதே; இந்த உலகம் உன்னுடைய ராஜ்யம் அல்ல; இது உலகத்தாருக்குரியது, சாத்தானுக்குரியது; உலகத்தாரை உலகத்தார் வரவேற்கிறார்கள். ஒருநாள் நீ பரலோக ராஜ்யத்திற்கு வரும்போது உனக்காக அங்கே எவ்வளவு மேன்மையான, மகிமையான வரவேற்பு

காத்துக் கொண்டிருக்கிறது என்பதை நீ தெரிந்துகொள்ளு வாயானுல் நீ முறுமுறுத்திருக்கமாட்டாய்'' என்ருர். அந்த வார்த்தைகள் அந்த ஊழியரை மிகவும் ஆறுதல்படுத்தினது.

நம்முடைய கண்கள் எப்போதும் பரலோக ராஜ்யத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கட்டும், அங்கே தான் நாம் நம்முடைய கிறிஸ்துவோடுகூட மகிழ்ச்சியாய் செலவழிப்போம்.

பரலோக ராஜ்யம் எப்படிப்பட்டது? எபிரெயர் 12:28 சொல்கிறது, ''அது அசைவில்லாத ராஜ்யம் ரோமர் 14:17 சொல்கிறது, ''அது நீதியும், சமாதானமும் பரிசுத்த ஆவியினுலுண்டாகும் சந்தோஷமுமான ராஜ்யம்'' I கொரிந்தியர் 4:20 சொல்கிறது ''அது பலத்தினுல் உண்டாயிருக்கிறது''.

பயப்படாதே, சிறுமந்தையே கர்த்தர் தமது பரலோக ராஜ்யத்தை உங்களுக்குத் தரும்படி சித்தம் கொண்டார்.

பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டு மென்ருல், நீ ஜலத்தினுலும், ஆவியினுலும் பிறக்கவேண்டும்; சிறுபிள்ளையைப் போல உன்னைத் தாழ்த்த வேண்டும்; பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்ய வேண்டும்; பரிசேயர், சதுசேயர் நீதியிலும் உன்னுடைய நீதி அதிகமாய் இருக்க வேண்டும்.

அப்போஸ்தலனுகிய பவுல் அந்தப் பரலோக ராஜ்யத் தைக்குறித்து தெள்ளந்தெளிவான தரிசனமும், அறிவும் உடையவராய் இருந்தார். ''நாம் அநேக உபத்திரவங்கள் வழியாக தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டும்'' என்பதே அவருடைய ஆலோசனை (அப் 14:22).

தேவபிள்ளையே, தேவன் உனக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்து கொள்ளுவதற்கு இப்பொழுதே ஆயத்தப்படுவாயாக.

2. ஒரு நகரம்:-

''அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே'' என்று எபி 11:16-ல் வாசிக்கிறோம். தேவனுடைய ஜனங்கள் மேன்மையான பரம தேசத்தை வாஞ்சிக்கும் போது தேவன் அந்தப் பரம தேசத்திலே அவர்களுக்கென்று ஒரு நகரத்தையும் கர்த்தர் ஆயத்தப்படுத்தியுள்ளார். ''அந்த நகரம் தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களையுடைய நகரமாய் இருக்கிறது'' (எபி 11:10).

இந்த பூமியிலே பல பட்டணங்கள் உண்டு; அரசாங்கங்கள் திட்டமிட்டு நகரங்களை கட்டி எழுப்புகின்றனர். சென்னையில் அண்ணாநகரை தோற்றுவிப்பதற்கு முன்பாக எத்தனையோ இஞ்சினியர்கள், அரசாங்க அதிகாரிகள், பல மந்திரிகள், இரவும், பகலும் அதற்கான திட்டங்களையும், வரைபடங்களையும் வைத்து அழகான பட்டணத்தை உருவாக்கினார்கள். இப்போது அது பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும், அருமையாகவும் இருக்கிறது.

ஆனால் தேவன் நமக்கு பரலோக ராஜ்யத்திலே அழகான நகரத்தை அமைத்திருக்கிறார். அந்த நகரத்திற்குப் பெயர் பரம எருசலேம். ''நீங்களோ தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமிற்கு வந்து சேர்ந்தீர்கள்'' என்று எபிரெயர் 12:22-ல் நாம் வாசிக்கிறோம்.

பூமியில் உள்ள நகரங்கள் அநித்தியமானவை; அழிந்து போகக்கூடியவை. பூமியில் நம்முடைய குடியிருப்பும் சொஞ்ச நாட்கள்தான். அப்போஸ்தலனாகிய பவுல் திட்டமாய் சொல்லுகிறார், ''நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம்'' (எபி.13:14). ''நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது'' (பிலி. 3:30).

அந்தப் பரம எருசலேம் பரிசுத்தமான நகரம். அது நமக்காக ஆயத்தப் படுத்தப்பட்டிருக்கிறது. அது புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல

ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிறது (வெளி. 21:22). அந்த நகரத்தின் மதிலுக்கு 12 அஸ்திபாரக் கற்கள் இருக்கின்றன; அவைகளின் மேல் ஆட்டுக்குட்டியானவருடைய 12 அப்போஸ்தலரின் 12 நாமங்களும் பதிக்கப்பட்டிருக்கின்றன (வெ.21:14). அந்த நகரம் சதுரமாய் இருக்கிறது; அதன் அகலமும் நீளமும் சமமாய் இருக்கிறது (வெளி 21:16). அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது; அந்த நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னுயிருந்தது (வெளி. 21:18). நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன (வெளி.21:19). பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாய் இருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது (வெ.21:21).

''அந்த நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும், சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு" (வெளி.21:23).

தேவபிள்ளையே, பெலனுன நகரம் நமக்கு உண்டு; நித்திய நித்தியமாய் நாம் அங்கே வாழுவோம். நாம் அந்த நகரத்தில் பிரவேசிக்கும் போது, ''சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களை திறவுங்கள்" என்றுதேவ தூதர்கள் ஆர்ப்பரிப்பார்கள் (ஏசாயா.26:2). மகிமையின் ராஜா நமக்காக ஆயத்தம்பண்ணிய அந்த மகா ராஜாவின் நகரத்திற்குள் நாம் மகிழ்ச்சியோடு பிரவேசிப்போம்.

3. நமக்காக ஒரு வாசஸ்தலம்:-

கிறிஸ்து இந்தப் பூமியை விட்டுக் கடந்து செல்லும் போது நமக்காக ஒரு வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவதாகச் சொல்லி போனார். இயேசு சொன்னார், ''என் பிதாவின் வீட்டில் நேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருந்

திருப்பேன்; ஒரு ஸ்தலத்தை நான் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்; நான்போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கும் இடத்திலே நீங் களும் இருக்கும்படி மறுபடியும் நான் வந்து உங்களை என் னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்றார் (வெளி 14:3).

கவனியுங்கள், இயேசு சொல்லுகிறார், ''பிதாவின் வீட்டில் வாசஸ்தலங்கள் உண்டு. ஆனால் தனியாக நான் உங்களுக்காக நான் இருக்கும் இடத்திலே வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவேன்'' என்றார்.

பிதாவின் வீட்டிற்கு பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான் கள் எல்லோரும் வருவார்கள். விசுவாசத்தில் பூரணப் பட்டவர்களெல்லாம் ஆபிரகாமினுடைய வாசஸ்தலத்திற் கும், அவருடைய மடிக்கும் வருவார்கள்; ஈசாக்கைப் போல தியானப் புருஷர்கள் ஈசாக்கின் மடிக்கு வருவார்கள்; யாக்கோபைப் போல தேவனோடு போராடி மேற்கொள்ளு கிறவர்கள் யாக்கோபின் மடிக்கு வருவார்கள்; ஏனோக்கைப் போல தேவனோடு சஞ்சரிக்கிறவர்கள் ஏனோக்கின் மடிக்கு வருவார்கள்.

ஆனால் புதியஏற்பாட்டுப் பரிசுத்தவான்களாகிய நாமோ பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களில் வாசஸ்தலத்திற்குச் செல்லுவது இல்லை, இயேசு சொன்னபடி அவர் இருக்கிற இடத்திலே அவருடைய வாசஸ்தலத்தில் இயேசுவோடுகூட வாசம் செய்வோம்.

இயேசு சொன்ன வார்த்தைகளைச் சற்று தியானித்துப் பாருங்கள். நான் இருக்கும் இடத்திலே நீங்களும் இருப்பீர் கள் என்றார். மட்டுமல்ல, அவர் வாசம் பண்ணுகிற வாசஸ்தலத்திலே வாசம் பண்ணி, அவருடைய சிங்காசனத் தில் நாம் அவரோடுகூட அமர்ந்து இருப்போம். ஜெயங் கொள்ளுகிறவன் எவனோ அவனும் என்னுடைய சிங்காசனத் தில் என்னோடுகூட உட்காரும்படி அருள் செய்வேன் என்று கிறிஸ்து சொன்னார். ஆம், இயேசுவோடுகூட சிங்காசனத்

இல் வீற்றிருப்பது எத்தனை பெரிய பாக்கியம்; அந்த பாக்கியமான நாட்கள் நம்மை எதிர்நோக்கியிருக்கின்றன!

4. நமக்காக ஒரு விருந்து:-

பரலோக ராஜ்யத்தில் நாம் பிரவேசிக்கும் போது தேவன் நமக்கு ஒரு பெரிய விருந்தையும் ஆயத்தம் பண்ணியிருக்கிறதைப் பார்த்து பூரிப்படைவோம். ''நீங்கள் போய்: இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன்; என் எருதுகளும், கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள்'' என்று கர்த்தர் நம்மை அனுப்புகிறார் (மத் 22:4).

உலகத்தாருக்கு அந்திக் கிறிஸ்துவினுடைய ஆட்சி காத்துக் கொண்டிருக்கிறது! ஆனால் நமக்கோ பரலோக விருந்து காத்துக் கொண்டிருக்கிறது ''ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்'' (வெளி 19:9) அல்லேலூயா!

கிழக்கிலும், மேற்கிலும், தெற்கிலும், வடக்கிலும் இருந்து வருகிற திரளான பரிசுத்தவான்களோடு கூட, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய முற்பிதாக்களோடு கூட பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களோடுகூட கிறிஸ்துவுடன் நாம் மத்திய ஆகாயத்தில் பந்தியிருப்போம், எல்லாரோடும் ஐக்கியப்படும் அந்த நாள் எத்தனை மகிழ்ச்சியான ஒரு நாள்! பரிசுத்தவான்களையெல்லாம் நேரில் சந்தித்து அளவளாவும் அந்தநாள் எத்தனை மகிழ்ச்சியானது; ஆம், நமக்காக ஒரு விருந்தை ஆயத்தம் பண்ணினாரே!

ஏசாயா 25:6-ஐ வாசித்துப் பாருங்கள். வேதம் சொல்லுகிறது. ''சேனையின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்; அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும்''.

விருந்தை ஆயத்தம் பண்ணுகிற ஆண்டவர் அந்த விருந்தில் என்னன்னவெல்லாம் இருக்கும் என்பதையும் சொல்லி நம்மை பரவசப்படுத்துகிறார்! எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்து நம்மோடுகூட பந்தியிருப்பார் என்று தியானிக்கும் போது உள்ளம் ஆனந்தக் களிப்பால் துள்ளுகிறது!

நாம் ஆத்தும மணவாளனாகிய கிறிஸ்துவோடுகூட, அவருடைய சொந்த மணவாட்டியாக அவரோடுகூட அமர்ந்திருப்போம். கர்த்தர் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாக முடிசூட்டப்பட்டிருப்பார்! அங்கே நேசம் என்னும் சமுக்காளம் விரித்து இருக்கும் (உன் 3:10). ஆடலும், பாடலும், துதியும், மகிச்சியின் ஆரவாரமும் வார்த்தையால் விவரிக்கவே முடியாத அளவுக்கு அத்தனை அருமையாய் இருக்கும். தேவன் ஆயத்தம் பண்ணின அந்த மகிமையான விருந்தை நாம் புசிப்பதற்கு நம்மைத் தகுதிப்படுத்தி, ஆயத்தப்படுத்திக் கொள்ளுவோமா?

5. ஆளுகையும், அதிகாரமும்:-

கர்த்தர் அங்கே நமக்காய் வைத்திருக்கிற சுதந்திரங்களையெல்லாம் தருவார்! கிரீடங்களையெல்லாம் அவருடைய கைகளினால் நாம் பெற்றுக் கொள்ளுவோம். ராஜ மேன்மையையும், ஆளுகையையும், வல்லமையையும், நியாயம் தீர்க்கும் அதிகாரங்களையும் கர்த்தருடைய கரத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்ளுவோம். அவருடைய கிருபைகளுக்காக நம் அருமை இரட்சகரை நன்றியோடு துதிப்போமா?

நம்முடைய தேவன் துதிக்குப் பாத்திரரானவர்; சகல கனத்திற்கும், மகிமைக்கும் பாத்திரரானவர்; நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கே மகிமையும், வல்லமையும் என்றென்றும் உண்டாயிருப்பதாக!

நாம் எல்லோரும் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி அவரைப் பணிந்து கொள்ளுவோம். கர்த்தாவே

தேவரீர் மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக் கொள்ளுவதற்குப் பாத்திரராய் இருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர்; உம்முடைய சித்தத்தினலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும், சிருஷ்டிக்கப்பட்ட பட்டவைகளுமாய் இருக்கிறது என்று சொல்லி அவரைப் பணிந்து கொள்ளுவோம். மட்டுமல்ல, நீர் அடிக்கப்பட்டு சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலும் இருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினலே மீட்டுக்கொண்ட எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதுப்பாட்டை பாடுவோம்.

பிரகாசம் நிறைந்த வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு கிரீடங்களைச் சூட்டிக் கொண்டு பரிசுத்தவான்களோடுகூட சேர்ந்து பரவசமாகும் அந்த நாள் எத்தனை ஆனந்த பாக்கியமான நாள்! கிறிஸ்துவை முகமுகமாய் தரிசிக்கும் அந்த நாள் எவ்வளவு மகிழ்ச்சியான ஒரு நாள்! தேவதூதர்களோடும், பரிசுத்தவான்களோடும் சேர்ந்து கர்த்தரை ஆராதிக்கும் பாக்கியம் எத்தனை பெரிய பாக்கியம்! அந்த பாக்கியமான நாள் மிகவும் நெருங்கிவிட்டது. கர்த்தருடைய வருகைக்காக ஆயத்தப்படுவோமாக.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

மனம் விட்டு உங்களோடே...!

இந்த புத்தகத்தின் மூலம் உங்களைச் சந்திக்கக் கிருபை செய்த தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும், சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

இந்த ஆண்டு சிலுவைப்பாடுகளைத் தியானிக்கும் விசேஷித்த நாட்களில் முள்முடி சூட்டப்பட்ட கிறிஸ்துவின் பாடுகளை மிக அதிகமாக தியானித்து பிரசங்கித்தேன். அதைத் தொடர்ந்து பெங்களூர் பேரின்பப் பெரு விழாவில், ''கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டும் கர்த்தர்'' என்ற தலைப்பில் செய்தியைக் கொடுத்தேன். அநேகம் பேர் ஆசீர்வாதம் பெற்றதாக நேரிலும் கடிதத்தின் மூலமாகவும் தெரிவித்தார்கள்.

ஆகவே, இது உங்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும்படி எழுதி வெளியிட்டிருக்கிறேன். இந்தப் புத்தகம் வெளியிடப்படும்படி மிக உதாரத்துவமாகக் கொடுத்த ஒரு குடும்பத்தினருக்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

Mr & Mrs. M. Simeon & family, Riyadh, KSA.

இந்தப் புத்தகத்தால் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களும் அவர்களையும் அவர்களது அருமைக் குடும்பத்தினரையும் சேருவதாக! கர்த்தர் வானத்தின் பலகணிகளைத் திறந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக!

இந்த புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது 50 பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச் செய்யும்!

ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்தும பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 75 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந் நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்து விட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புஸ்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக !

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம்.

J. சாம்ஜெபத்துரை M.A.

50, ரெயில்வேஸ்டேஷன் ரோடு

கோடம்பாக்கம், **சென்னை - 600 024.**